Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-17 | 02-11-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -258

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
சி.10704 வவுனியா.
T.P: 024-222 4247



## யசூசி அகாசி-தமிழ்ச்செல்வன் நேற்று நண்பகலில் சந்திப்பு!

(அலுவலக செய்தியாளர்)

ஜப்பானிய சமாதானத் தூதுவர் யசூசி அகாசியும் குழுவினரும் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

மேற்படி சந்திப்பு நேற்று நண்பகல் 12.00 மணிமுதல் பிற்பகல் 1.45 மணிவரை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றது.

விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த சுடர் மணி, கலைத்தமிழ், ஜோர்ஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜப்பான் தரப்பிலிருந்து ஜப்பானிய சமாதானத் தூதுவர் யசூசி அகாசி ஜப்பானிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தென்மேற்கு ஆசிய பிராந்திய

(12ஆம் பக்கம் பார்க்க)



# ஜப்பான் தூதுவர் சந்திரிகாவிடமிருந்து புதிதாக எதையும் கொண்டுவரவில்லை!

## பேச்சுவார்த்தை குறித்து எந்தமுடிவிற்கும் வரமுடியாது என்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**ஜப்பானின் சமாதானத்தூதுவர் யசூசி அகாசி அரசின் புதிய யோசனைகள் எதையும் கொண்டுவரவில்லை. வழமைபோல் சந்திரிகாவும் அவரது அரசாங்கமும் தெரியப்படுத்துகின்ற அதே கருத்துக்களையே கொண்டு வந்துள்ளார். இவற்றை வைத்துக்கொண்டு பேச்சுவார்த்தை தொடர்பான எந்த முழவையும் நாம் எடுக்க முழயாது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

ஜப்பான் சமாதானத்தூதுவர் யசூசி அகாசியுடனான சந்திப்பின் பின்னரே இவ்வாறு அவர் தெரிவித்தார். அச்சந்திப்புக்குறித்து அவர் வழங்கிய பேட்டி விபரம் வருமாறு.

கேள்வி:- ஜப்பானிய தூதுவர் யசூசி அகாசியுடனான சந்திப்பின் போது என்ன என்ன விடயங்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடினீர்கள்.

பதில்:- எங்களுடைய இச்சந்திப்பில் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசி அவர்களையும் ஜப்பானிய தூதுக்குழுவினரையும் சந்தித்துப் பேசியிருக்கின்றோம். இதில் முக்கியமாக இவர்க

(02ஆம் பக்கம் பார்க்க)

## தடைகளை நீக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள உடன்பாடு கண்டுள்ளோம்!

### -ஜப்பான் விசேட தூதுவர் யசூசி அகாசி-

(கிளிநொச்சி)

தற்போதைய முட்டுக்கட்டைகளைத் தீர்ப்பதற்காக சகல முயற்சிகளையும் மேற்கொள்வதற்கான உடன்பாட்டைக் கடந்துள்ளோம் என அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உடனான சந்திப்புக் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஜப்பானின் சமாதானத் தூதுவர் யசூசி அகாசி தெரிவித்தார்.

மேலும் அவர் தமிழ்ச் செல்வனும் நாங்களும் இன்று சமாதான முன்னெடுப்புகள் பற்றியும் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தித்திட்ட உதவிகள் பற்றியும், கலந்தாலோசித்தோம். தற்போதைய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியில் நேற்றிரவும் வன்முறை: பள்ளிவாசல் மீது கைக்குண்டு வீச்சு!

### 20 இற்கும் மேற்பட்டோர் வன்முறையில் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடியில் இரு முஸ்லிம் மதப்பிரிவினருக்கு இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறை இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்துள்ளது. இதன்போது ஒரு பள்ளிவாசலும் ஆரம்பப்பாடசாலை ஒன்றும் சேதமானதுடன் இருபதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். கடைகள் சிலவும் தீக்கிரையாகியுள்ளன.

இந்தச் சம்பவம் பற்றி மட்டக்களப்பில் இருந்து எமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று இரவு பத்து முப்பது மணியளவில் காத்தான் குடியில் உள்ள தைகாப் பள்ளிவாசல் மீது முதலில் கிரனேட் ஒன்று வீசப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கோழி திருடச்சென்ற இருவர் மின்சாரம் தாக்கி பரிதாப மரணம்

### -சடலத்தை அகற்ற முயன்ற இருவர் கைது-

நள்ளிரவு நேரம் கோழிக்கூட்டில் கோழி திருடச்சென்ற இருவர் மின்சாரம் தாக்கி ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்கள்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை உடுவில் மல்வம் என்னும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இறந்த இருவரின் உடல்களையும் அவ்விடத்தில் இருந்து அகற்ற முயன்ற இருபெண்களை சுன்னாகம் பொலிஸார் கைது செய்து மல்லாகம் மாவட்ட நீதி மன்றில் ஆஜயர் செய்தபோது இவ் இருவரையும் வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி சறோஜினி இளங்கோவன் கட்டளையிட்டுள்ளார்.

இச்சம்வம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; மரணம் அடைந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மலேசியாவிலிருந்து 85 பேர் இல.திருப்பி அனுப்பப்பட்டனர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக மலேசியாவில் தங்கியிருந்த 85 பேர் நேற்று மாலை இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டனர்.

இரண்டு வருடங்களுக்கு மேலாக இலங்கையில் தங்கியிருந்து தொழில்புரிந்து வந்த இவர்களை மலேசியா அரசாங்கம் நேற்று இலங்கைக்கு திருப்பியனுப்பியுள்ளது. நேற்றுமாலை 5.30 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய இதேவேளை நேற்று இரவு 12 மணியளவில் மேலும்மொரு தொகுதியினரும் இலங்கையை வந்தடைந்தனர். இவர்களின் கருத்துப்படி மலேசியாவில் சுமார் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட இலங்கையர் சட்டவிரோதமாகத் தங்கியுள்ளாரெனத் தெரியவரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய ஆலோசனை பேரவைக்கூட்டம் எதிர்க்கட்சிகளால் முற்றாகப் புறக்கணிப்பு!

### முஸ். காங்கிரஸ் மன்றுக்குழு பங்கேற்பு

சனாதிபதி சந்திரிகாவினால் உருவாக்கப்பட்ட சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசியஆலோசனைப் பேரவையின் அரசியல் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது சிறிலங்கா கூட்டணிக் கட்சிகளைத் தவிர சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாற்றுப்பிரதிநிதிகள் சிலர் மட்டுமே கலந்துகொண்டனர்.

நேற்று நடைபெற்ற இந்தப்பேரவையின் அரசியல் குழுக்கூட்டத்தில் ஐக்கியதேசியக்கட்சி, இலங்கைத்தமிழரசுக்கட்சி, ஜாதிகஹெல உறுமய ஆகியகட்சிகளின் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

இக்கூட்டத்தில் சனாதிபதி உரையாற்றுகையில், விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் பொழுது பாராளுமன்றத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய...

எங்களுடைய நிலைப்பாடுகளைத் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கின்றோம். எங்களுடைய தலைமைப்பீடத்தினது நிலைப்பாடு என்ன என்பதனையும், இன்றுள்ள நெருக்கடி நிலைமைகள் பற்றியும் இந்தச் சமாதான நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு விரைவில் ஒரு இடைக்காலத் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதனுடைய முக்கியத்துவத்தை மிகவும் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கின்றோம்.

ஏனெனில் இந்தச் சமாதான சூழல் இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் எமது மக்களுக்கு எந்தவொரு நன்மையும் அளிக்கவில்லை என்பனையும், இச் சமாதான நடவடிக்கைகளில் மக்கள் முற்றாக நம்பிக்கை இளந்திருக்கும் நிலையையும் நாங்கள் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

அவர்களும் எங்களுடைய கருத்துக்களைப் புரிந்து கொண்டு நிலைமைகளை ஏற்றுக்கொண்ட தன்மையினை எங்களால் அவதானிக்க முடிந்தது.

அந்தவகையில் இன்றைய சந்திப்பு ஒரு ஆக்கபூர்வமாகவே இருந்தது. நாங்கள் எமது நிலைப்பாட்டை மீளவும்உறுதியோடு வலியுறுத்தியிருக்கின்றோம்.

தெற்கிலே இன்றுள்ள சூழலைப் பயன்படுத்திக்கொண்டு எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபின் அடிப்படையில் பேச்சுக்களைத் தொடங்கி அதற்குத் தீர்வுகண்டு அது நடைமுறைக்கு வந்தபின்பு இறுதித்தீர்வு சம்பந்தமான பேச்சுக்களைத் தொடங்கலாம். விடுதலைப் புலிகளினுடைய நிலைப்பாட்டிற்கு தெற்கில் கூட எதிர்க்கட்சிகள் ஆதரவினைத் தெரிவித்திருக்கின்றன..

இந்தச் சந்தர்ப்பத்தை அரசாங்கம் பற்றிப் பிடித்துக் கொண்டு சனாதிபதியையும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சரியான சூழலை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பதை நாங்கள் அவர்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

**கேள்வி:- இச்சந்திப்பின் போது ஜப்பான் அரசாங்கம் வடகிழக்கு பிரதேசத்திற்கான புனர்வாழ்வுக்கு உதவிதர வேண்டும் என்பது பற்றி நீங்கள் விரிவாக எடுத்துக் கூறியுள்ளீர்களா?**

பதில்:- நிச்சயமாக அதனை நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம்

யுத்தத்தால் எங்களுடைய மக்களின் வாழ்விடங்கள் அடிப்படைக் கட்டுமானங்கள் அனைத்துமே சிதைக்கப்பட்ட நிலையில் ஒரு மனிதாபிமான நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறார்கள். ஆகவே இந்த நிலையில் எங்களுடைய மக்களுக்கு அவசரமான மனிதாவிமான பணிகளை மேற்கொள்ள வேண்டிய கடைப்பாடு விடுதலைப் புலிகளுக்கு இருக்கின்றது.

ஆகவே விடுதலைப் புலிகள் அமைப்பினால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்களுக்கு ஜப்பான் அரசு நேரடியாக உதவிதர வேண்டும் என்பதனையும் நாங்கள் அவர்களிடம் வலியுறுத்திக் கூறியிருக்கின்றோம்.

**கேள்வி:- ஐரோப்பிய நாடுகளிடையிலான உங்களுடைய ஒரு மாதகால சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட பின்பு முக்கியமான ஒரு சமாதானத் தூதுவரைச் சந்தித்துப் பேசியிருக்கின்றீர்கள்.இந்த நிலையில் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கக் கூடியதற்கான ஏதேனும் நல்ல அறிகுறிகளை உணர்த்தியிருக்கிறீர்களா?**

பதில்:- எங்களைப் பொறுத்தவலையில் ஒரு தரப்பு என்ற ரீதியில் எங்களுடைய நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திற்கு மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

ஆனால் ஜப்பானியத் தூதுவர் அரசாங்கத்தினது ஒரு ஆக்கபூர்வமான முடிவுகள் எதனையும் கொண்டுவரவில்லை. என்றுதான் கூறமுடியும். வழமையாகவே சந்திரிகாவும், அரசாங்கமும் தெரியப்படுத்துகின்ற அதே கருத்துக்களையே கொண்டு வந்திருக்கின்றார். இது வழமையாகவே அவர்கள் நாளுக்கு நாள் கூறுகின்ற கருத்துக்களே ஒழிய இது ஒரு உறுதிப்பாடான அனுசரணையாளர் ஊடாக ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு அடித்தளத்தைப் போடுகின்ற நிலையை எடுக்காத நிலையில்,

இந்த அறிக்கைகளையும் செய்திகளையும் வைத்துக் கொண்டு நாங்கள் எந்தமுடிவுக் கும் வரமுடியாது தான் இருக்கின்றது.

**கேள்வி:- நீங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான பயணத்தை மேற்கொண்டு வந்த பிறகு உங்களுக்கு அரசாங்கத்தின் நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டிருக்கும். இதில் முன்னர் ஒரு மாதகாலத்திலிருந்த நிலைப்பாட்டிற்கும் இப்போதைய நிலைப்பாட்டிலும் ஏதாவது முன்னேற்றம் காணப்படுகின்றதா?**

பதில்:- எங்களைப் பொறுத்தவரையில் முன்னேற்றம் என்று எதையும் கூறமுடியாது. ஏனெனில் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த காலத்திலிருந்து பேச்சுவார்த்தைகளுக்குத்தாங்கள் ஆயுத்தமாக இருப்பதாகவும், பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட வேண்டும் என்கிற ஒரு நிலைப்பாட்டை அறிக்கைகளாக வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர அனுசரணையாளர்களூடாக உண்மையிலேயே பேச்சுவார்த்தை மேசைக்கோ அல்லது பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கான ஆக்கபூர்வமான முடிவுகளை எடுத்து எதையும் நடைமுறைக்குக் கொண்டவரவில்லை.

**கேள்வி:- இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றும் இந்தியா இதில் தலையிட வேண்டும் என்கின்ற சூழ்நிலைகள் அதிகமாக இருக்கின்றன. இது எந்தவகையில் சமாதானத்திற்கு ஆரோக்கியமாக இருக்கும்?**

பதில்:- எங்களைப் பொறுத்தவரையில் இரண்டு தரப்பினுடைய சமபல நிலையில்தான் இந்த யுத்த நிறுத்தஒப்பந்தமும் பேச்சுவார்த்தை சூழலும் உருவானது. இந்த வலுச் சமநிலை சீர்குலைக்கப்படு மாக இருந்தால்அது சமாதான முன்னெடுப் புதலுக்கும், அமைதி முயற்சிகளுக்கும் நிச்சயமாக ஒரு நெருக்கடி நிலையைத் தோற்றுவிக்கும்.

ஆகவே இந்தியாவினுடைய பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி நாங்கள் இப்பொழுது எதுவும் அதிகார பூர்வமாகக் கூறமுடியாது. ஆனால் அது உண்மையாக இருந்தால் அதனை ஒரு போதும் எமது மக்களோ, தமிழீழ விடுதலைப் புலிகளோ நிச்சயமாக மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அது ஒரு பக்கச் சார்பான நடவடிக்கையாகத்தான் கருதப்படும்.

ஏனெனில் இப்பொழுது ஒரு சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற சூழல் படைத் தரப்பிற்கு உதவிகள் வழங்குவது என்பது அது படை வலுச்சம நிலையினைச் சீர்குலைக்கின்ற நிலையாகத்தான் கருதப்படும்.

**கேள்வி:-சமாதான முயற்சிகளை மீண்டும் முன்னெடுக்க வேண்டும் என்ற தொனிப்பு எல்லோரிடமும் இருந்தாலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அணிகள் ஒன்று திரண்டு தென்பகுதியில் சம்மேளனம் ஒன்றை உருவாக்கி வருகின்றன. இது சமாதான முயற்சிகளுக்கு ஏதேனும் நேரடியாகப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்று நீங்கள் கருது கிறீர்களா?அல்லது அதை நீங்கள் எப்படிக் கையாளப் போகின்றீர்கள்?**

பதில்:- ஒவ்வொரு கால கட்டத்திலுமே தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு நாங்கள் தீர்வு காண முனையும்போது தெற்கிலேயே இந்தச் சமாதானத்திற்கெதிரான சக்திகள் இப்படியானக் குழுப்பங்களை ஏற்படுத்திய வண்ணமே இருக்கின்றன.

சமாதான முயற்சிகளை அரசாங்கம் இழுத்தடித்து வருகின்ற நிலையில் இன்னும் அவர்களுக்கான சந்தர்பமும் வாய்ப்பும் அதிகரிக்கும் இந்நிலையில் இன்னும் கொஞ்சம் பலமான நிலையில் அவர்களுடைய செயற்பாடுகள் தீவிரமடைந்திருக்கிறது.

**கேள்வி:- சுவிற்சர் லாந்திலேயே இந்த இடைக்கால நிர்வாகசபை வரைபு பற்றிச் சட்ட நிபுணர்களுடன் கலந்துரையாடியிருக்கின்றீர்கள் அதுபற்றிக் கூற முடியுமா?**

பதில்:- நாங்கள் முக்கியமாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை சம்பந்தமாக தெற்கிலேயே உருவான விமர்சனங்கள், குற்றச் சாட்டுக்கள் பற்றி விரிவாக ஆராய்ந்தோம்.

சர்வதேச அளவில் முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சிகள் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கள் போன்ற பல்வேறு விடயங்களை எடுத்து ஆராய்ந்து எங்களால் முன்னெடுக்கப்பட்ட திட்டத்தை அத்தோடு இணைத்து நாங்கள் ஆராய்ந்தோம்.

எங்களைப் பொறுத்தவரையில் எங்களுடைய சட்ட வல்லுநர்கள் சர்வதேச ரீதியிலான சட்ட நிபுணர்கள் அனைவரும் இது ஒரு மிகவும் உறுதியானதும் காத்திரமானதும், சரியானதும் எங்களுடைய மக்களினது நீண்ட முயற்சிக்குப்பின்னால் ஒரு இடைக்கால நிலைப்பாடாக முன்வைக்கப்பட்ட இந்தத்திட்டவரைவை எல்லோருமே ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள். இது ஒரு மனிதாபிமானமான ரீதியான ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்என்பதுதான் அவர்களுடைய கருத் தாகவும் இருந்தது.

ஆகவே எங்களுடைய அந்தக் கலந்துரையாடல் ஆக்கபூர்மானதாகவும், தெற்கிலே உள்ள அல்லது இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை சம்பந்தமாக பிழையாக விமர்சனம் செய்பவர்களுக்குச் சரியான பதிலை நாங்கள் எதிர்காலத்தில் கொடுப்பதற்குரிய ஒழுங்கமைப்பை நாங்கள் இந்தக் கலந்துரையாடல்களில் முடிவெடுத் திருக்கின்றோம்.

**கேள்வி:- இந்த ஐரோப்பிய விஜயத்தின் மூலம் நீங்கள் அரசியல் ரீதியாக எதனை அடைந்திருக்கிறீர்கள்.**

பதில்:-இலங்கை அரசாங்கம்அல்லது அதனைச் சார்ந்த அமைச்சர்களும் விடுதலைப் புலிகள் அமைப்பு சமாதானத்தின் மீதும் அமைதி முயற்சிகளின் மீதும் அர்ப்பணிப்பும், ஆர்வ மற்று இருப்பதாகவும், சமாதானத்திற்கு விரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டு இருக்கின்றார்கள் என்றும் சர்வதே ரீதியில் பாரியளவில் உண்மைக்கு மாறான கருத்துக்களைப்பரப்பி வந்தன. இவற்றிற்கு நாங்கள் நேரடியாகச் *சென்று முக்கியமாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் சென்று ஐரோப்பிய பாராளுமன்றம்போன்றவற்றிற்கும் சென்று அங்கு நாங்கள் நேரயடிகவே அவர்களுக்கு உண்மை நிலைகளை எடுத்து விளக்கியிருக்கின்றோம்.

உண்மையிலேயே நாங்கள் நேரடியாகச் சென்று அவர்களுக்கிருந்த சந்தேகங்களையும், அச்சங்களையும் போக்கும் வகையில் நாங்கள் எமது தலைமைப்பீடத்தின் உறுதியான நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியது அவர்களுக்கு என்றும் திருப் தியைக் கொடுத்திருப்பதை எங்களால் உணர முடிகின்றது.

**கேள்வி:- இலங்கை அரசாங்கம் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்க சர்வதேச அரங்கில் நீங்கள் முற் பட்டது போல உள்நாட்டிலே ஒரு அழுத்தத்தைக் கொண்டு வருவதற்காக என்னவிதமான முயற்சிகளை மேற் கொண்டுள்ளீர்கள்.**

பதில்:-ஏற்கனவே உள்நாட்டில் தாங்கள் அதற்கானமுயற் சிகளைத் தீவிரப்படுத்தி இருக்கின்றோம். எங்களுடைய தாயகத்தைப் பொறுத்தவரை எங்களுடைய மக்கள் சமாதானத்தின் மீதும் தங்களுடைய உரிமைகளைப் பெற்றெடுக்க வேண்டும் என்பதற்காகவும் ஒரு தீர்வைப் பெற்றெடுக்கவேண்டும் என்பதில் ஒரு ஒற்றுமையோடும், எமது தலைமையின் கீழ் அணிதிரண்டு நிற்கிறார்கள்.

ஆனால் தெற்கிலேயேதான் குழப்பங்கள் அதிகம் இருக்கின்றது. நாங்கள் தெற்கிலேயே உள்ள சில சிவில் அமைப்புத் தலைவர்கள் செய்தியாளர்கள் அங்குள்ள முக்கியஸ்தர்கள், கல்விமான்கள் போன்ற பல முக்கி யமானவர்களையும் மதத்தலை வர்களையும் நாங்கள் இங்கு அழைத்து அவர் களுக்கு எங்களது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூறியிருக்கின்றோம். ஆகவே அது எங்களுக்கு ஒரு ஆக்கபூர்வமான முக்கியமாகவே தென்படுகின்றது.

அதேபோன்று தமிழத்தேசியக் கூட்டமைப்புக் கூட அண்மைக்காலத்திலேயே அங்கு சென்று சிங்கள மக்கள் மத்தியிலும் சிங்களப் பத்திரிகையளார்கள் மத்தியிலும் சிங்கள அமைப்புக்கள் மட்டத்திலேயும் உண்மையான நிலைப்பாடுகளை விளக்கியிருக்கின்றனர். இதுவும் ஒரு ஆக்கபூர்வமான முயற்சி என்றே நினைக்கின்றேன்.

**கேள்வி:- நீங்கள் ஐரோப்பிய பயணத்தை முடித்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இது ஒரு பெரிய முயற்சி. இதன் பின்னர் நீங்கள் தமிழ் மக்களுக்கு இந்தச் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்படுமா என்ற பெரும் எதிர்பார்ப்பு இருக்கின்றது. அவர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்:- எங்களுடைய மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தெளிவாக இருக்கின்றார்கள். அவர்கள் எப்பொழுதுமே எதிர்பார்த்திருப்பது தமிழீழ விடுதலைப் புலிகள் அதன் தலைமை தங்களுடைய அபிலாசை களை தங்களுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் அவர்கள் தங்களுடைய போராட்ட அரசியல் முன்னெடுப்புக்களை மேற்கொள்வார்கள் என்பதைத்தான்.

அந்தவகையில்தான் அண்மைக் காலத்தேர்தலில் வந்த வெளிப்பாடு. ஆகவே எங்களுடைய மக்கள் ஒன்றை முழுமையாக நம்பலாம். தமிழீழ விடுதலைப் புலிகள் எப்பொழுதுமே எங்களுடைய மக்களின் குறிக்கோள்களை அபிலாசைகளை வென்றெடுப்பதில் மிக உறுதியாக தங்களுடைய அரசியல் முன்னெடுப்புக்களை முன்னெடுத்துச் செல்வார்கள் என்பதில் எங்களு டைய மக்கள் எப்பொழுதும் நம்பிக்கையாக இருக்கலாம். எங்களின் ஐரோப்பிய பயணம் கூட சர்வதேச சமூகத்திற்கு எங்களு டைய மக்களின் அபிலாசைகளையும், மக்களின் இன்றைய நிலைப்பாடுகளையும் தெளிவாக்குகின்ற ஒரு பயணம்தான். ஆகவே அந்த வகையில் நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு எங்களுடைய மக்களின் நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

**கேள்வி:- உங்களுடைய அடுத்தத்திட்டம் எதுவெனக் கேட்டபோது?**

எங்களுடைய அடுத்தத்திட்டம் எங்களுடைய தலைவரைச் சந்தித்த பின்னர்தான் தெரியவரும். நாங்கள் சர்வதேசத்தின் மத்தியில் கலந்துரையாடிய விடயங்கள் அவர்களுடையக் கரிசனைகளை , அவர்களுடையக் கருத்துக்களை எமது தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு செல்கின் றோம். எதிர்காலத்திலேயே நிலைமைகள, சூழ்நிலைகளைப் பொறுத்து எமது தேசியத்தலைவர் தெளிவான முடிவுகளை எடுப்பார் என்று நான் நம்புகின்றேன்.

**கேள்வி:- உங்கள் ஐரோப்பிய விஜயத்தின் போது அந்நாடுகள் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும்படி உங்கள் மீது ஏதாவது அழுத்தம் தெரிவித்தார்களா?**

பதில்:- எங்கள் மீது அழுத்தம் போட்டாலும் அது தானாக இறங்கிவிடும். ஏனெனில் நாங்கள் பேச்சுவார்த்தைக்கு எப்பொழுதுமே தயாராக இருக்கின்றோம். நாங்கள் ஆரம்பத்திலிருந்தே எங்களுடைய தலைவர் அவர்கள் நோர்வே வெளிவிவிகார அமைச்சரைச் சந்தித்து நாங்கள் பேச்சு வார்த்தைக்குத்தயாரென்றும், எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபை வரைவின் அடிப்படை யில் பேச்சுவார்த்தையி னைத் தொடங்கி அது நடை முறைக்கு வந்தபின்பு இறுதித் தீர்வுக்கு பேச்சுவார்த்தைகளைத் தொடங்கலாம் என்று தெளிவாக வழங்கியிருந்தார்.

**கேள்வி:- வரும் சில வாரங்களில் தேங்கிப் போயிருக்கும் இந்தச் சமாதான முயற்சிகளின் ஏதேனும் முன்னேற்றம் அல்லது நகர்வு ஏற்படும் என்று நினைக்கிறீர்களா?**

பதில்:- நாங்கள் நம்புவதை விட எதிர்பார்க்கின்றோம். நங்கள் அது பற்றிக் கடுமையான முயற்சிகளை எடுத்து வருகின் றோம். ஆனால் இதைப் பற்றி பிடிக்க வேண்டியது இரண்டு தரப்பும் என்ற வகையில் எதிர்த்தரப்பும் இதைப் பற்றிப்பிடித்து இந்தச்சமாதான முயற்சிகளை ஆரோக்கியமாக முன்னெடுக்கவேண்டும் .அதில் ஒரு தரப்பு மட்டும் உறுதியாகவும், தீர்க்கமாகவும் இருப்பதால் இணக்கப்பாடு ஏற்பட முடியாது. நிச்சயமாக மற்றத தரப்பினால் அது வரவேண்டும் நாங்கள் சர்வதேச சமூகத்திற்கும் இந்த நிலைப்பாட்டை எடுத்து விளக்கியிருக்கின்றோம். சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தத்தைப் பிரயோகித்து பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவார்கள் என்று நம்புகின்றோம். நிச்சமாக எதிர்வரும்காலங்களில எதோ ஒரு மாற்றங்களைக் காணக்கூடியதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

**கேள்வி:- இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தையில் அக்கறையற்றிருப்பதற்கு அவர்களுடைய அரசியல் அழுத்தங்களைவிட வேறு ஏதாவது அழுத்தம் இருக்கும் என்று நினைக்கிறீர்களா? உள்நாட்டு அரசியல் அழுத்தங்களைவிட வேறு ஏதாவது வெளி அழுத்தங்கள் இருக்கின்றனவா?**

பதில்:- உள்நாட்டிலே அவர்கள் தங்கள் அதிகாரங்களைத் தக்க வைப்பதிலேயே தான் அவர்கள் குறியாக இருக்கின்றனர்.

தங்களுடைய அரசியல் எதிர்காலம்பற்றிக் கவனம் செலுத்தின்றார்களேயொழிய இங்குகொழுந்துவிட்டு எரிகின்ற இந்தத் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்பதில் அர்ப்பணிப்பின்றி இருப்பதையேக் காணக் கூடியததாக உள்ளது.

(சோ,கு

# அமெ.படையினர் ஏவுகணைத்தாக்குதல்

# ஈராக்கில் 15 அப்பாவிப் பொதுமக்கள் பலி

(பாக்தாத்)

**அமெரிக்கப்படைத்தளமொன்றிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் பொதுமக்கள் குடியிருப்புப் பகுதியில் விழுந்து வெடித்ததில் பதினைந்து அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந் திருப்பதாகவும் தெரிவிக்கப்டுகின்றது.**

ஈராக்கில் அமெரிக்கப்படைகளை இலக்கு வைத்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கெதிராகவே அமெரிக்கப் படையினர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாகவும் எனினும் ஏவுகணைகள் இலக்குத்தவறி பொதுகமக்கள் செறிந்து வாழும் பகுதியில் வீழந்து வெடித்திருப்பதாக ஈராக்கியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நேற்று முன் தினம் ஈராக்கின் பலூஜா நகரில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலொன்றில் ஒன்பது ஈராக்கிய படைவீரர்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே. இதேவேளை ஈராக்கின் புனரமைப்பிற்கென அமெரிக்காவும் உலகநாடுகளும் வாக்குறுதி யளித்திருந்த நிதியில் பெரும் பாலான பகுதி இதுவரை கிடைக்க வில்லையென அறிவிக் கப்படுகிறது.

அமெரிக்கா 3000 ஆயிரம் கோடி டொலர் நிதியை வழங்க முடியுமென அறிவித்திருந்த போதிலும் 150 கோடி டொலர்கள் மட்டுமே இதுவரை கிடைத்துள்ளது. அதேவேளை ஈராக்கின் எண்ணெய் விற்பனை மூலம் 150 கோடி டொலர்களைப் பெறமுடியுமென ஈராக்கிய அதிகாரிகள் எதிர் பார்த்திருந்தனர். இத்தொகையிலும் கணிசமான பங்கு பலதரப்பட்ட காரணங்களினால் இதுவரை பெற்றுக கொள்ளவில்லையென தெரிவிக் கப்பட்டுள்ளது.

## கடத்தப்பட்ட யப்பானியரின் தலையற்ற உடல் கண்டெடுப்பு

(பாக்தாக்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் தீவிரவாதிகளினால் பிடித்துச் செல லப்பட்ட யப்பான் நாட்டு இளைஞரின் உடல் தலையறுக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கோ'ட என்ற அந்த இளைஞன் கொலை செய்யப்பட்டமைக்கு யப்பான கடும் கண்டனத்தை தெரிவித்துள்ள அதேவேளை தீவிரவாதிகளின் மிரட்லுக்கு பணியப் போவதில்லை யென்றும் ஈராக்கிலிருந்து யப்பான் படைகளை திரும்பப் பெறும்பேச்சிற்கே இடம்மில்லை யென்றும் யப்பான் பிரதமர் யுனியுரே கொய்சுமி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஈராக்கில் கடமையில் ஈடுபட்டுள்ள போலந்து படைகளை திருப்பி அழைக்குமாறு தீவிரவாதிகளினால் பிடித்து வைக்கப்பட்டுள்ள போலந்து நாட்டுப் பெண்ணான கலிபா வேண்டு கோள் விடுத்துள்ளார்

ஈராக்கில் இருக்கும் போலந்து நாட்டுப்படைகளை உடனடியாகத் திரும்பப் பொறதுவிட்டால் கலிபாவை கொலை செய்து விடப்போவதாக தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுக்கப்பட்டதையடுத்தே கலிபா அன்நாட்டு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

-காரில் சென்று கொண்டிருந்த போது-

## பாக்தாத்தின் பதில் ஆளுநர் நேற்று தீவிரவாதிகளால் சுட்டுக் கொலை

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் துப்பாக்கிதாரி ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பாக்தாத்தின் இடைக்கால அரசின் பதில் ஆளுனர் உயிரிழந்துள்ளதுடன் அவரது மெய்ப்பாது காவலர் ஒருவரும் காயமடைந்துள்ளதாக உள்துறையமைச்சு தெரிவித்துள்ளது.

இவர் காரில் பயணம் செய்து கொண்டிருக்கும் போது பள்ளி வாசல் ஒன்றைக் கடந்து சென்ற வேளையே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈராக்கில் எதிர்வரும் சனவரி மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு வாக்காளர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை இடம் பெற்று வரும் வேளை இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

ஈராக்கில் அமெரிக்க ஆதரவுடன் செயற்பட்டு வரும் இடைக் கால அரசின் அதிகாரிகள் மீது தீவிரவாதிகள் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 5ஆம் நூற்றாண்டுச் சின்னம் அல்ஜீரியாவில் மீட்பு

(அல்ஜீரியா)

அல்ஜீரியாவில் கி.மு 5ஆம் நூற்றாண்டுகாலச் சின்னமொன்று மீட்கப்பட்டுள்ளது.தங்கத்திலான முகமூடி வடிவில் இந்தச் சின்னம் அமைந்துள்ளதாக இச் சின்னத்தை மீட்டுள்ள தொல்லியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில் கி.மு 5 ஆம் நூற்றாண்டுகளில் அல்ஜீரியாவை ஆட்சி செய்த மன்னரது முகமூடியாக இது இருக்கலாமென்று தாம் நம்புவதாகவும் தொல்லியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கி.மு 46 ஆம் ஆண்டளவில் ரோமர்களின் சாம்ராட்சியம் ஆரம்பமாகும் வரை அல்ஜீரியா ருமேனியாவை உள்ளடக்கிய பரந்த பிரதேசமாக இருந்ததாகவும் தொல்லியலாளர்கள் மேலும் தெரிவித்துள்ளார்கள்.

## அரபாத் இறந்தால் அவரது உடலை ஜெருசலேமில் அடக்கம் செய்யமுடியாது

இஸ்ரேலிய பிரதமர் அறிவிப்பு

(ஜெருசலேம்)

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் உடல் நிலை தோறிவரும் அதே நேரம் இஸ்ரேல் பலஸ்தீனர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை நிறுத்தியுள்ளது.

மிகக் கடமையான நிலைப்பாட்டில் உள்ள இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் யசீர் அரபாத் உயிரிழந்தால் அவரது உடலை ஜெருசலேத்தில் அடக்கம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாதென்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை யசீர் அரபாத் எந்தவித கொடிய நோயினாலும் பாதிக்கப்படவில்லை என்று பிரான்ஸ் மருத்துவர்கள் உறுதியாகக் கூறியுள்ளதோடு வைரஸ் தொற்று ஏற்பட்டதனாலேயேஅதவரது உடல் நிலை பாதிக்கபட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.

மருத்துவ விசராணை அறிக்கை நாளை வெளியிடப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை யசீர் அரபாத் தொடர்ந்தும் தலைமைத்துவத்தில் இருக்கக்கூடாதென்பதே இஸ்ரேலின் நிலைப்பாடாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் அரபாத் தொடர்ந்தும் தலைமைத்துவத்தில் இருக்கும்வரை பேச்சுவார்த்தைகளில் ஈடுபடப் போவதில்லையென்றும் இஸ்ரேல் பிரதமா தெரிவித்துள்ளார்.

இதனிடையே பலஸ்தீனப் பாராளுமன்றமும் தேசியப் பாதுகாப்புச்சபையும் நேற்று முன்தினம் விசேட கூட்டமொன்றைக் கூட்டியிருந்தது. இதன்போது அரபாத்தின் கொள்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென்றும் அக் கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 16ஆம் திகதி முதல் நைஜீரியாவில் பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு

-எண்ணெய்விலை அதிகரிக்கலாமென அச்சம்

(லண்டன்)

உலகில் 8ஆவது மிகப் பெரிய எண்ணெய் உற்பத்தி நாடான நைஜீரியா மீண்டும் இம்மாதம் 16ஆம் திகதியிலிருந்து பொது வேலை நிறுத்தத்தினை எதிர் கொள்ளவுள்ளது. இது குறித்து அந்த நாட்டின் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இதன் காரணமாக ஏற்கனவே நெருக்கடி நிலையிலிருக்கும் சர்வதேச எண்ணெய் சந்தையில் விலைகள் அதிகரிக்கக்கூடும் என்றும தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தடவை மேற்கொள்ளப் படும் வேலைநிறுத்தம் காலவரையறையற்றதாகவும் முழுமையானதாகவும் இருக்குமென்று நைஜீரிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் கூறியுள்ளார்.

இதன்காரணமாக கச்சா எண்ணெய்யின் உற்பத்தியும், ஏற்றுமதியும் வெகுவாகப் பாதிக்கப்படுமென்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

## இன்று நடைபெறும் அமெ.சனாதிபதித் தேர்தல்

(வோஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதித் தேர்தல இன்று நடைபெறுகின்றது. இந் நிலையில் இருதலைவர்களின் வெற்றி நூல் இழையிலேயே தீர்மானிக்கப்படவிருப்பதாக இறுதியாக மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

## இஸ்ரேல் சந்தையில் தற்கொலைத் தாக்குதல்

–மூவர் பலி 30பேர் காயம்

(டெல்அவில்)

இஸ்ரேலிய சந்தை ஒன்றில் பலஸ்தீன போராளி ஒருவர் நேற்று தற்கொலைத் தாக்குதல் நடத்தியதில் மூன்று இஸ்ரேலியர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 30பேர் காயமடைந்துள்ளனர்.

பலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணி இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது. சந்தையின் காய்கறி விற்பனைப்பகுதியில் இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

## சவுதியில் மூவர் கைது துப்பாக்கிகள் மீட்பு

(றியாத்)

சவூதியரேபிய பாதுகாப்பு அதிகாரிகள் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் 3பேரைக் கைது செய்துள்ளனர்.

இதன்போது இவர்களிடமிருந்து 23 கைக்குண்டுகள், 20வெடிக்க வைக்கும் சாதனங்கள், துப்பாக்கிகள், துப்பாக்கி ரவைகள் என்பனவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

## சகாக்களை அமெரிக்கா விடுவிக்க ஆப்கான் தீவிரவாதிகள் காலக்கெடு

(காபூல்)

ஆப்கான் சிறையிலுள்ள தலிபான் மற்றும் அல்-ஃஹறதா ஆதரவாளர்களை நாளை அமெரிக்கா விடுதலை செய்யாதுவிட்டால் பிணைக்கைதிகளாக உள்ள 3 ஐக்கிய நாடுகள் ஊழியர்களை கொன்றுவிடப்போவதாக இவர்களைக் கடத்திச் சென்ற அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர்.

இதுபற்றி மேலும் அவ் அமைப்பு தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபை ஊழியர்களும் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளதுடன் தவறினால் பிணைக்கைதிகளாகப் பிடித்துவைத்துள்ள மூவரையும் கொலைசெய்யப் போவதாக எச்சரித்துள்ளனர்.

கடந்த மாதம் 9ஆம் திகதி நடைபெற்ற ஆப்கானிஸ்தான் தேர்தலுக்காக ஐ.நா.சபை ஊழியர்கள் ஆப்கான் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## யுரேனிய சுத்திகரிப்பை மீண்டும் ஆரம்பிக்க ஈரானிய பாராளுமன்றம் அனுமதி

-அனைத்து உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களிப்பு

(தெக்ரான்)

யுரேனிய சுத்திகரிப்பு நடவடிக்கையை ஈரானிய அரசாங்கம் மீண்டும் ஆரம்பிக்க வற்புறுத்தும் சட்ட மூலத்தின் முதலாவது பகுதியை ஈரானிய பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

பாராளுமன்றத்தில் சமுகமளித்திருந்த 247 அங்கத்தவர்களும் இதனை ஆதரித்து வாக்களித்துள்ளனர். சென்றவருடம் ஒக்ரோபர் மாதத்தில் இந்தத் திட்டத்தை இடைநிறுத்தப் போவதாக ஈரான் அறிவித்திருந்த போதிலும் யுரேனியக் கொள்கலன்களின் உற்பத்[illegible]யை அது மீண்டும் ஆரம்பித்தி[illegible]து. மின் உற்பத்திக்காகவே யுரேனியம் உபயோகிக்கப்படுமென்று ஈரான் அறிவித்துள்ளது.

இதனிடையே சர்வதேச சமூகம் ஈரானுக்கு விடுத்த எச்சரிக்கையில் யுரேனிய சுத்திகரிப்பு நடவடிக்கைகள் சகலத்தையும் ஈரான் இடைநிறுத்தாவிட்டால் ஐ.நா.பாதுகாப்புச் சபை மூலம் பொருளாதாரத் தடையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று தெரிவித்துள்ளது.

# 10 கணினிகள் அன்பளிப்பாகக் கிடைத்தும் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்படவில்லை

## -உடுத்துறை ம.வி. மாணவரின் அவலம்

(வடமராட்சி கிழக்கு)

**யா/ உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் வழங்கப்பட்ட கணினித் தொகுதிகளை மாணவர்கள் இன்னமும் பயன்படுத்த முடியாத நிலை இருந்து வருகிறது. இதனை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.**

யா/உடுத்துறை ம.விக்கு பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்துவரும் பழையமாணவர் செல்லையா என்பவரும், பிரான்ஸ் தமிழ்த் தென்றல் அமைப்பும் சேர்ந்து பத்து இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட 10கணினிகளையும், ஒன்றரை இலட்சம் ரூபாவுக்கு கணினி இயக்குவதற்கான மின் பிறப்பாக்கியினையும் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இவ் வைபவம் ஒருமாதத்துக்கு முன் இடம் பெற்றது. அன்று தொடக்கம் இன்றுவரையும் கணினி சம்பந்தமான வ தப்புக்கள் தொடக்கப்படவில்லை என்று தெரியவருகின்றது.

காரணம் கணினிபயிற்றுவிக்கும் ஆசிரியர் இல்லை. பல பாடசாலைகளில் கணினி இல்லாமல் உள்ள நிலையில் இங்கு பத்துக்கணினிகள் பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கின்றன. பாடசாலை நிர்வாகம், பழைய மாணவர்கள் சங்கம், பெற்றார் ஆசிரியர் சங்கம் போன்ற நிர்வாகங்கள் கூட ஒரு ஆசிரியரை நியமிக்க எந்த விதமான ஒரு அழுத்தங்களையும் கொடுக்கவில்லை என்பது மிகவும் வேதனை தருகின்றது என்று கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)



கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியிலிருந்து பன்னங்கண்டி ஊடாகச் செல்லும் வீதி நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாமல் இருப்பதையும் மழைகாலங்களில் நீர் தேங்கியிருப்பதால் பெரும் சிரமத்துடன் பயணிக்கும் மக்களையும் படத்தில் காணலாம். (படம் வரன்)

# வவுனியாவில் மாணவர் மத்தியில் கலாச்சார சீர்கேடுகள் அதிகரிப்பு!

## விழிப்புடன் செயற்பட அறிவுறுத்து

(செட்டிகுளம்)

வவுனியாவில் உள்ள மாணவர்களின் மத்தியில் தற்போது கலாச்சார சீர் கேடுகள் தலை தூக்கியுள்ளன. இது உடனடியாக நிறுத்துவதற்கு புத்தி ஜீவிகளும், பெற்றோர்களும் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும். இவ்வாறு வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் விநோகராதலிங்கம் வவுனியா முத்தையா மண்டபத்தில் இடம் பெற்ற வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்தி சபையால் நடத்தப்பட்ட நிகழ்வில் தெரிவித்தார்.

மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கையில் கவனம் செலுத்துவதை விடுத்து சில நபர்களோடு இணைந்து சமூகவிரோத செயல்களில் ஈடுபடுவதுடன் பெண் பிள்ளைகளை நையாண்டி செய்வதும் போதை, மது, போன்ற தீய பழக்கவழக்கங்களுக்கும் அடிமையாகியுள்ளனர்.

இவற்றினை நிறுத்துவதற்கு பாடசாலை ஆசிரியர்களால் மட்டும நடவடிக்கை எடுக்க முடியாது சமூகத்தில் ஆர்வம் கொண்டவர்களும் பிள்ளைகளின் பெற்றோர்களும் நடவடிக்கை எடுப்பது இன்றைய சூழ் நிலையில் மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளது என்று அவர் தெரிவித்தார். (21)

# சிறார்களின் போசாக்கு திட்டத்திற்கு உதவியளிப்பு

(விசுவமடு)

பரந்தன் உமையாள்புரம் கிராமத்திலுள்ள முப்பது முன்பள்ளி சிறார்களின் பெற்றோர்களுக்கு கடந்த 26ஆம் திகதி உலக தரிசன நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பரந்தன் பிரதேச இணைப்பாளர் ஊடாக முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவு போசாக்குத் திட்டத்தின் கீழ் தானிய வகை- பழ மரக்கன்றுகள் தென்னம் பிள்ளைகள் என ஒரு சிறுவனுக்கு 500 ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உலகத்தரிசன நிறுவன இணைப்பாளர் வீ.பிறேம் குமார், பரந்தன் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் செ.கருணாகரன், மற்றும் முன்பள்ளி ஆசிரியை செல்வி. விசையலட்சுமி, உமையாள்புரம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவி திருமதி விக்ரர்மான்-சாந்தி- உமையாள்புரம் கிராம அபிவிருத்திச் சங்கமத் தலைவர்- சிவபாதம் முன்பள்ளி சிறார்கள் பெற்றோர் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (10)

# உணவு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் 200 பயனாளிகளுக்கு உள்ளீடுகள் வழங்கல்

உணவு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் கிளி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் உணவு விவசாய நிறுவனமும், இணைந்து நடைமுறைப் படுத்தும் திட்டத்தில் உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு 26.10.2004 அன்று காலை 9.00 மணிக்கு ஊற்றுப்புலம் கிராம பொதுநோக்கு மண்டபத்தில் கமக்கார அமைப்புத் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் விவசாயிகளுக்கான உள்ளீடுகளாக சிறுதானியம், மரக்கறிவிதைகள் என்பன ஒரு விவசாயிக்கு தலா எழுநூறு ரூபா பெறுமதியான உள்ளீட்டுப் பொருட்கள் 200 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அக்கராயன் பிரதேச இணைப்பாளர் பி.பாஸ்கரன், உலக உணவு நிறுவனப் பிரதிநிதிகள், கமக்கார அமைப்பு பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# குளங்களின் நீர் மட்டம்

(மல்லாவி)

அண்மையில் பெய்துவரும் கடும் மழையினால் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளன. கடந்த 30ஆம் திகதி நிலவரம் வருமாறு:- வவுனிக் குளம் 7அடி, 6அங்குலம், பழைய முறிகண்டி 5அடி, தேறாங்கண்டல் 7அடி,3அங்குலம், கொல்லவிளாங் குளம் 9அடி,5 அங்குலம், வான் பாயும் நிலையில் உள்ளது ஐயங்கன் குளம் 6அடி, அம்பலப்பெருமாள 3அடி, 5 அங்குலம், கோட்டை கட்டிய குளம் 4அடி, தென்னியங் குளம் 4அடி 2அங்குலம், மல்லாவி 4அடி 8அங்குலம், பனங்காமம்குளம் 8அடி,8 அங்குலம் என்றநிலையில் தற்போது நீரமட்டம் உயர்ந்துள்ளன. (24)

# பனம்விதைகள் நாட்டல்

(புதுக்குடியிருப்பு)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் கடந்த வெள்ளிக்கிழமை குமுழமுனைப் பிரதேச இணைப்பாளர் சிவகுமார் தலைமையில் அளம்பில் பிரதேசத்தில் இருக்கும் தூண்டாய்க் கடற்கரைப் பிரதேசத்தில் 2500 பனம் விதைகள் நாட்டப்பட்டன. இந்நிகழ்வில் அளம்பில் வடக்கு தெற்கு விவசாயப் பிரதிநிதிகளும் கடற்புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர் யாழ்மன்னன் உட்பட பெருமளவிலான மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (08)

# “நெடுங்காலத்தின் பின்னொரு நாள்” சிறுகதைத் தொகுதி வெளியீடு

(வவுனியா செய்தியாளர்)

விண்மணி வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் பத்திரிகையாளர் பி.ரவிவர்மனின் நெடுங்காலத்தின் பின்னொரு நாள் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு கடந்த புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தில் ஊடகவியலாளர் கனகரவி தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வரவேற்புரையை சனச அபிவிருத்தி வங்கி நிறைவேற்று உத்தியோகத்தர் பரமோகரன் நிகழ்த்த நூல் அறிமுக உரையை பத்திரிகையாளர் ஜனாப் எம்ஏ.எல் நிலாம் நிகழத்தினார். வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஞானவேல் நூலினை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் கே.ஏ. செந்தில்நாதன் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து வெளியீட்டுரையினை ஊடகவியலாளர் ஆறு. சுபாஸ்கரன் நிகழ்த்த வரவேற்புரையை நூலாசிரியர் பி.ரவிவர்மன் நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில் பாரா்ளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், விநோகராதலிங்கம் உட்படபலர் கலந்து கொண்டனர்.

# வலைப்பாடு கிராமத்தில் 37 முதியோர் கௌரவிப்பு

வலைப்பாடு சென் ஆன்ஸ் இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வலைப்பாடு கிராமத்தில் உள்ள முதியோர்கள் 37பேரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. வலைப்பாடு புனித அன்னம்மாள் ஆலயத்தில் அருட்தந்தை அன்ரன் றொக்கினால் சிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு 37 முதியோர்களையும் பவனியாக அழைத்துச் சென்று வலைப்பாடு பொது நோக்கு மண்டத்தில் கௌரவிப்பும், பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக அரச, அரச சார்பற்ற பிரதிநிதிகளும் மற்றும் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள் பிரதேச பொறுப்பாளர்கள். பங்குமக்கள் அனைவரும் கலந்துகொண்டு இந்நிகழ்வினைச் சிறப்பித்தார்கள்.



கிளிநொச்சியைத் தலைமைப் பணிமனையாகக் கொண்டு இயங்கி வரும் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஐக்கிய இராச்சியத்திலிருந்து வந்திருந்த கோப் (HOPE) மருத்துவக் குழுவினர் வன்னியில் தங்கி நின்று மருத்துவ சேவைகளை ஆற்றினர். புளியங்குளம் திலீபன் மருத்துவ சேவை நிலையத்தில் கடந்த 21 ஆம் திகதி கண்பரிசோதனை செய்து மூக்குக்கண்ணாடிகள் வழங்கியதுடன் பொது மருத்துவ சேவையும், உடல் இயன் சிகிச்சைகளும் வழங்கப்பட்டன .(படம்-சோதி)

# பிரதான வீதியில் கட்டாக்காலிகள் போக்குவரத்திற்குப் பெரும் இடையூறு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது.

இரவு, பகல் வேளைகளில் பிரதான வீதிகளில் தற்போது கூடுதலாக கட்டாக்காலி கால்நடைகள் நிற்பதை அவதானிக்க முடிகின்றது. இதனால் வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை கட்டாக்காலியாகத் திரியும் நாய்களின் எண்ணிக்கையும் தற்போது என்றும் இல்லாத தவாறு அதிகரித்துள்ளது. இந்த நாய்கள் வீதிகளில் அதிகமாகத் திரிவதால் வீதிவிபத்துக்கள் இடம் பெற்று வருகின்றன.

கட்டாக்காலியாகத் திரியும் நாய்கள் வாகனங்களில் சிக்குண்டு இறந்து வீதிகளில் கிடப்பதையும் காணமுடிகின்றது. (08)

# வடமராட்சியில் பயணிகள் வாகணங்களின் தகுதி குறித்து பொலிசார் பரிசோதனை

(நமது நிருபர்)

வடமராட்சிப் பகுதியில் சேவையிலீடுபடும் சிற்றூர்தி, பயணிகள் வாகனங்கள், ஆட் டோக்கள் சேவையிலீடுபடத் தகுதியான வையா என சிறிலங்கா பொலிசார் சோதனையிடுகின்றனர்.

மேற்குறித்த பகுதிகளில் வீதிகள் சந்திகள் தோறும் பொலிசார் சேவையிலீடுபடும் வாகனங்களை நேற்று முதலாம் திகதி சோதனையிட்டனர். இந்நடவடிக்கை தொடர்ந்து இருக்கும்எனவும் தெரிய வருகிறது.

சிற்றூர்திகளை மறித்து ரயர் மற்றும் வாகன உதிரிகள் நல்ல நிலையில் இருக்கின்றனவா என துருவித்துருவிப் பார்க்கின்றனர். வீதிவிபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதால் அதனைத் தடுக்கும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 176 மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து 2004ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 176 மாணவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கௌரவிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை இன்பர் சிட்டி ஞானியார் கல்விக்கழகம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் வைத்து மாணவர்களைக் கௌரவித்து பாராட்டு விழாவும் நடத்தியுள்ளன.ஞானியார் கல்விக்கழகத் தலைவர் வே.நவரத்தினராசா தலைமையில் நடைபெற்ற இப் பாராட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தார். மேலும் சிறப்பு விருந்தினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (45)

# எமது மண்ணிலிருந்து இராணுவம் கைக்கூலிகள் வெளியேற்றப்படும்வரை தமிழர்தம் பணிதொடர வேண்டும்



(யாழ்ப்பாணம்)

**எமது மண்ணில் இருந்து இராணுவம், பொலிசார், இராணுவத்தினது கைக்கூலிகள் அனைவரும் நிரந்தரமாக வெளியேற்றப்படும் வரை தமிழீழ மக்களது பணி தொடர வேண்டும் என்கிறார். தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன்**

1986.10.30 கோட்டையில் இருந்த இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ்.மத்திய கல்லூரியின் மாணவ ஒன்றியத் தலைவன் பொன்விபுலானந்தன் ஞாபகார்த்தமாக பாடசாலை மாண வர்களிடையேயான கூடைப்பந்தாட்டம் மற்றும் கலை நிகழ்வுகள் போட்டி இடம் பெற்றது. இதன் இறுதி நிகழ்வுகள் 30.10.2004 மாலை 6.30 மணியளவில் சிரேஷ்ட மாணவ முதல்வன்சுரேந்திரன் தலைமையில் யாழ்.மத்திய கல் லூரியில் இடம் பெற்றது. இந்நிகழ் வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த் தும் போதே அவர்இதனைக் குறிப் பிட்டுள்ளார். அவர் தனது உரை யில் மேலும் தெரிவித்ததாவது;

இப்படியான போட்டி நிகழ்வுகள் மாணவர்களது ஆற்றலை வெளிப்படுத்திக் கொள்வதற்கு ஒரு நல்ல களமாக அமைந்துள்ளது. 1948 ஆம் ஆண்டு முதல் சிங்கள ஆட்சியாளர் தமிழ் இனத்தை அழித்து விட்டு இந்த நாட்டை பௌத்த சிங்கள நாடாக மாற்றுவதற்கு பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தனர். அதன் ஓர்வடிவமாகவே மாணவன் விபுலானந் தன் சுட்டுக் கொல்லப்பட்டான் கோட்டையில்இருந்த இராணுவம் எம்மை அழிக்க முற்பட்ட போது அப்பாட சாலை மற்றும் ஏனைய பிரதேசங்கள் மீது எறிகணைத் தாக்குதலை மேற்கொண்ட போது அம்மாணவர் களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக தனது பணியினை மேற்கொண்டிருந்த போதே அவர் அந்தக் கொடிய இராணுவத்தின் சினேப்பர் தாக்குதலுக்கு உள்ளாகி மரணமானார்.அதே கோட்டையில் இருந்த இராணுவமே சிங்கள அரசியல்தலைமையின் துணையோடு வந்து யாழ்ப்பாண பொது நூலகத்தையும் எரித்து தீக்கிரையாக்கியது. விடுதலைப் புலிகளை நேரடியாக எதிர்கொள்ள முடியாமல் பொதுமக்கள் மீது. தாக்குதலை நடத்தியது. எனவே இது வெறுமனவே நிகழ்வாக மட்டும் இராது அம்மாணவனது பணியை அனைவரும் பொறுப்பேற்று எமது தேசியத்தலைவரின் காலத்தில் எமது உரிமையைப் பெறவேண்டும் எனக்குறிப்பிட்டார்.

## திருத்தும்பணி ஆரம்பம்

யாழ். மாவட்டத்தில் கார்ப் நிறுவனத்தின் கீழ் வீதிகள் செப்பனிடும் பணிஆரம்பிக்கப்பட்டுள்ளது. அச்செழுநாச்சிமார் கோவில்வீதி, குடியேற்றத்திட்டவீதி, புத்தூர் விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு கருத்தோலைவீதி, இருபாலை, சந்தைவீதி ஆவரங்கால் வீதி ஆகியன முதற்கட்டமாக திருத்த வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளண.

## ஹரித்தாஸின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய உயர் அதிகாரி யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

பிரான்ஸ் நாட்டின் ஹரித்தாஸ் அமைப்பினது தென் கிழக்கு ஆசிய பிராந்தியத்தின் பொறுப்பதிகாரி அலேசியஸ் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்.

பிரான்ஸின் நிதி உதவியுடன் ஹரித்தாஸ் அமைப்பில் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக யாழ். வந்த அதிகாரிகள் இருவரும் வருகை தந்திருந் தனர்.

இவர்கள் யாழ். குடாநாட்டு அபிவிருத்தியின் தேவைப்பாடுகள் குறித்து ஆராயும் பொருட்டு உள்ளூர் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடியுள்ளனர்.

இதன் போது இவ் அமைப்பினர் கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டு மக்களுக்குச் சமாதானத்துடன் கூடிய அபிவிருத்தியே அவசியமானது எனச் சுட்டிக்காட்டினர். (33)

## யாழ்.பொம்மை வெளிப்பகுதியில் குடியிருப்புக்களில் வெள்ளம் புகுந்தது

(நல்லூர்)

பொம்மை வெளிப்பகுதியில் குடியிருக்கும் சுமார் 25இற்கு மேற்பட்ட குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதுடன் சுமார் 75இற்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தினால் சூழப்பட்டும் காணப்படுகின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் திரும்பிய மக்களின் தற்காலிக குடிசைகளுக்குள்ளேயே வெள்ளம் புகுந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேநேரம் இப்பகுதி மக்களின் அவல நிலைமையை அப்பகுதி மக்களின் கிராம அலுவலரோ, பிரதேசச் செயலாளரோ கூட சென்று பார்வையிடவில்லையெனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (41)

## யாழ்.மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுப்பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் விசேட திட்டம் ஒன்றை உலகஉணவுஸ்தாபனம் அமுல்ப்படுத்தவுள்ளது.

கடந்தகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.குடாநாட்டுப்பாடசாலை மாணவர்களில் 55வீதமான மாணவர்கள் போஷாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையை கவனத்தில் கொண்டேபாடசாலை மாணவர்களுக்காக இலவச சத்துணவு வழங்கும் விசேட திட்டம் ஒன்றை உலக உணவுஸ்தாபனம் அமுல்ப்படுத்துகிறது. (33)

## தெல்லிப்பளை சந்திவரை பேருந்து சேவையை நீடிக்குக!

### பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் கோரிக்கை

(நல்லூர்)

தெல்லிப்பளைச் சந்தி வரை பஸ் சேவையை நீடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வலி வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சி.சிவமகாராசா வலி வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விட்டுள்ளார்.

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் யூனியன் கல்லூரி மற்றும் புற்றுநோய் வைத்தியசாலையும் இயங்கவுள்ளமையினால் துர்க்கையம்மன் ஆலயம் வரை இடம் பெறும் பஸ் சேவையை தெல்லிப்பளைச் சந்தி வரை நீடிக்க வேண்டுமெனக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

வலி வடக்கு பிரதேச செயலாளர் எஸ். முரளிதரன் தலைமையில் இக் கூட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (41)

## இலையான்கள் அதிகரிப்பு

வடமராட்சிப் பிரதேசமெங்கும் பரவலாக இலையான்கள் அதிகரித்துள்ளன. இதனால் வீடுகள் சிற்றுண்டிச்சாலைகளிலும் பெருந் தொல்லைகளை அனுபவிக்க வேண்டியுள்ளது. ஆதலால் சுகாதாரப் பகுதியினர் இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர்.

# பயிர் செய்ய இராணுவம் அனுமதித்தும் கெடுபிடி ஓயவில்லையெனக் கவலை

### மறவன்புலவு,தனங்கிளப்பு, கைதடி விவசாயிகள் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் படையினரால் அனுமதிக்கப்பட்ட விவசாய நிலப்பரப்புக்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருப்போர் படையினரது கெடுபிடி நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் சங்கம் புகார் தெரிவித்துள்ளது.

தென்மராட்சி தெற்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத் தினுள் காணப்படும் மறவன் புலோ, தனங்கிளப்பு, கைதடி போன்ற பிரதேசங்களில் உள்ள விளைநிலங்களில் ஒரு பகுதியை அண்மையில் படையினர் விவாசாயிகளின் பயிர்ச்செய்கை நடவடிக்கைக்காக அனுமதித்தனர்.

இதற்கமைவாக இவ்வாண்டு தொடக்கம் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுவரும் நிலையில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் மேற்படி பகுதி விவசாய நிலங்கள் காணப்படுவதைக் காரணம் காட்டி இங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோருக்கு பாஸ் நடைமுறையை அமுல்ப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் அப்பகுதி விவசாய நிலங்களுக்கு கொண்டுசெல்லும் இடுபொருட்கள் (உரம்) மற்றும் மருந்துப் பொருட்களை படையினர் கடுமையாக சோதனை செய்த பின்னர் அவற்றை க்கொண்டு செல்ல அனுமதிக்கின்றனர்.

இதனால் அப்பகுதி விவசாயிகள் தமது இயல்பான தொழில் நடவடிக் கைகளில் ஈடுபட முடியாது சிரமப்பட்டு வருகின்றனர். (33)

## சமூர்த்தி செயல் திட்டம் இடத்திற்கிடம் வேறுபாடு

### -யாழ். கிராம அலுவலர்கள் முறைப்பாடு

(நல்லூர்)

யாழ். மாவட்டத்தில் சமூர்த்தித் திட்டத்தை முன்னெடுப்பது சம்பந்தமாக நிதி அமைச்சில் இருந்து வந்த இரு உத்தியோகத்தர்கள் யாழ். குடாநாட்டு பிரதேச செயலகங்களுக்குச் சென்று சமூர்த்தி செயல் திட்டம் சம்பந்தமாக கலந்துரையாடி வருகின்றனர்.

இதேநேரம் இடத்துக்கிடம் வேறுபட்ட செயல்பாடுகளை மேற் கொண்டு வருவதாகவும் கிராம அலுவலர்கள் குறைப்பட்டுள்ளனர். (41)

# சந்திரிகாவின் அரசியல் நகர்வு...?

முதலாவது நிறைவேற்றதிகார சனாதிபதியாக 10 வருடங்கள் பதவி வகித்த ஜே.ஆர் ஜெயவர்த்தனாவும் இறுதி இரண்டு ஆண்டு காலம் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளானார். அதாவது மக்களின் எதிர்ப்புக்குள்ளானார். 5 ஆண்டுகள் பதவி வகித்த பிரேமதாசவுக்கும் இதே நிலையே ஏற்பட்டது. அதனை சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏற்படுத்தியது. அன்று சமத்துவம் பற்றியோ அஹிம்சைவழி அரசியல் பற்றியோ பேசவில்லை. ஜே. ஆரும், பிரேமதாசவும் மக்கள் விருப்பத்துடன் ஆட்சிப் பீடம் ஏறியோர் என்று நினைத்தவர்களுமல்ல. அவர்கள் கையில் கிடைத்ததை எடுத்து தாக்குபவர்கள் போல் செயற்பட்டனர். அதனால் மக்களின் வெறுப்புக்கு ஆளாவோம் என்றும் சிந்திக்கவில்லை. அதனால் ஜே.ஆரையும் பிரேமதாசவையும் மக்கள் பூச்சியத்துக்குள் தள்ளிவிட்டனர். "ஜே. ஆரே வீடு செல்" என்று சுவர்களில் எழுதினர். அடுத்து "பிரேமதாசவிற்குப் பைத்தியம்" என்று எழுதினர். பின்னர் வந்த விஜயதுங்கவையும் ஆறுதலாக இருக்க மக்கள் விடவில்லை.

ஆயினும் 10 வருடம் பதவியைப் பூர்த்தி செய்துள்ள சந்திரிகாவை வீட்டுக்குச் செல்லுமாறு கூற ஒரு வாய்கூடக் கிடையாது. அது ஏன்? அதற்குக் காரணம் தற்போதைய எதிர்க்கட்சியாகும். எதிர்க்கட்சியிலுள்ள சிலர் உயிருக்குப் பயந்தவர்களாக உள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானோர் • சந்திரிகாவிடம் பேரம் பேசுபவர்களாக இருக்கின்றனர். சந்திரிகா தற்போது எதிர்க்கட்சியினரை ஆட்டிப்படைக்கிறார். எதிர்க்கட்சி ஆளும் கட்சியை ஆட்டிப்படைப்பதை விடுத்து ஆளும் கட்சி எதிர்க்கட்சியை ஆட்டிப்படைக்கும் நிலை உருவாகியுள்ளது. ஆளும் கட்சி எதிர்க்கட்சியின் நோக்கப்படி அல்லாமல் தனது நோக்கப்படி நடக்கின்றது 2001ஆம் ஆண்டு தேர்தலில் எதிர்க்கட்சியில் இருந்த சந்திரிகாவுக்கு ஏற்றவாறு ரணில் அரசு செயற்பட்டதன்றி தனது விருப்பப்படி ஆட்சி நடத்த முடியாது போயிற்று. அதே ஆளும் கட்சியே இன்று எதிர்க்கட்சி ஸ்தானத்தில் இருக்கிறது.

"இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாம் சந்திரிகாவுக்கு பாதுகாப்பளிக்கின்றோம்" என்று கூறுவதே இன்று சந்திரிகாவின் காதில் விழுகிறது. 10 வருடங்கள் ஆட்சி



செய்து எதிர்க்கட்சி என்ற நிலைக்குத் தள்ளப்பட்டும் கூட நாம் சந்திரிகாவுக்கு உதவி செய்வோம் என்று கூறும் நிலைக்கு எதிர்க்கட்சியை உருவாக்க முடிந்தமை சந்திரிகா எதிர்க் கட்சியைக் கையாளும் திறமையாகும். அவரின் அரசியல் முடிவுகளின் படியே எதிர்க் கட்சியை அவர் நிர்வகிக்கின்றார். அத்தகைய திறமை அம்மாவான சிறிமாவுக்கோ தந்தையான பண்டார நாயக்காவுக்கோ இருக்கவில்லை.


அவரது ஆட்சியின் பலம் கூட்டணிகளின் உதவியைப் பெற்றிருப்பினும் சந்திரிகா தனித்து நின்றே எந்த முடிவையும் எடுக்கிறார். அது சந்திரிகாவின் குணம்.

இன்னும் சில தினங்களில் அவர் ஒரு முடிவை எடுப்பார். அது சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது அல்லது பாராளுமன்றில் அமைச்சரவையில் மாற்றம் கொண்டு வருவது, அல்லது சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்துவது என்பதாக இருக்கும் என எதிர்க்கட்சி நினைக்கலாம். அவரது முடிவு சபாநாயகருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதே முக்கிய அரசில் நகர்வாக இருக்கும் அதுவே அரசியல்.

அரசியலில் அஹிம்சாவாதம் சமத்துவம், தார்மீகம் என்பதெல்லாம் பொய். இதுவே அரசியல் என்று சந்திரிகா விளங்கிக் கொண்டுள்ளார். இவற்றை தேடிக் கொண்டு அலைவதாலேயே ரணிலின் எதிர்க்கட்சி அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வராமல் உள்ளது. சந்திரிகா இவற்றைக் கணக்கிலும் எடுப்பதில்லை. ஆனால் சர்வ தேசத்தின் அழுத்தம் வரும் போது மட்டும்தான் எடுத்தமுடிவு தவறாகப்படும். அதற்கும் அவர் நியாயம் கற்பித்து தப்பித்து விடுவார்.

அதனால் சபாநாயகருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதில் எந்தத் தடையும் இருக்காது.

எதிர்க்கட்சிகளோடு சந்திரிகாவுக்கு புரிந்துணர்வு பிரச்சினை கிடையாது. அதற்கு காரணம் தமது புரிந்துணர்வுக்கு ஏற்றவாறு எதிர்க்கட்சிகள் நடந்து கொள்வதாகும். அதன் பலனாக தற்போதைய சபாநாயகரை நீக்கி விட்டு தனது கட்சியில் ஒருவரை பதவியமர்த்தி அரசியலமைப்பை மாற்றுவதற்கேற்ற அரசியலமைப்பு சபை ஒன்றை உருவாக்கலாம். அல்லது பாராளுமன்றில் தனக்கு ஆதரவானவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி அரசியலமைப்பை மாற்றலாம். அமைச்சுப் பதவிகளை ஏற்க எதிர்க்கட்சி உறுப்பினர்களை அழைப்பதற்கும் அவருக்கு எவ்வித தடையும் கிடையாது. ஆனால் ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவர் கட்சி மாறினால் அவரைத் துரோகி என்று கூற சந்திரிகாவுக்கு முடிந்தது. அன்று ரணில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தேசிய அரசாங்கம் பற்றிக் கதைத்த போது தனது கட்சி உறுப்பினர் எவராவது ரணிலுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என சந்திரிகா கண்டிப்பாக உத்தரவிட்டார். அன்று ஐ.தே கட்சி பற்றி தனது உறுப்பினர்களை வாய் திறக்கக் கூடாதென்று எச்சரித்தார். ஆயினும் இன்று சந்திரிகா இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தேசிய அரசு அமைய வேண்டும் எனக் கூறும் போது அதற்கு ஆதரவு வழங்க ரணில் கட்சியினர் சபதமிடுகின்றனர். இதனால் சந்திரிகாவிற்கு சுலபமாக அவர்களின் ஆதரவைப் பெற்று கொள்ள முடிகிறது. இதைப்பற்றி யாரும் வினா எழுப்பினால்க் கூட அது கட்சித் தலைமையின் ஆலோசனைப்படி சந்திக்கச் சென்றதாக கதை வெளிவருவதுடன் அந்த உறுப்பினர் தப்பிக் கொள்வார் ஆகவே ஆட்சிக்கு பெரும்பான்மை பெறுவதில் கூட சந்திரிகாவுக்கு எவ்வித கடினமும் கிடையாது.



நீ என்னை விழுங்கினால் நான் இதை விழுங்குவேன்

சந்திரிகா அதை விட இன்னும் ஒரு படி மேலே சென்று முன்னைய ரணில் ஆட்சியின் போது சில அமைச்சர்கள் ஊழல் மோசடியில் ஈடுபட்டதாகக் கூறிக் கொண்டு வழக்குத்தாக்கல் செய்துள்ளார். ஏனைய அமைச்சர்களாக இருந்தோரும் தமக்கும் இந்த நிலை ஏற்படலாம் என சந்திரிகாவின் கூத்துக்கு ஏற்றவாறு நடந்து வா என்றால் வரவும், போ என்றால் போகவும். கூடிய நிலைக்குட்பட்டுவிட்டார்கள். ஆகவே சந்திரிகா பக்கம் சென்று விட்டால் ஊழல் மோசடி செய்திருப்பினும் அவர்கள் தப்பிக் கொள்ளலாம்.

இவை எல்லாவற்றையும் அறிந்தே ஐ.தே.க. உறுப்பினர் மீது சந்திரிகா வலை வீசியிருக்கிறார். அதிலும் அவருக்குத் தடையேற்படில் சர்வசன வாக்கெடுப்புப் பற்றி சிந்திப்பார். சர்வசனவாக்கெடுப்பில் தமிழர்களின் வாக்கு முக்கியம்.

அதற்காகவே இடைக்கால நிர்வாகத்தை முன்வைத்துப் பேச்சை ஆரம்பிக்கலாம் என்று கூறியிருக்கிறார். அந்தப்பிரச்சினை தீர்ந்தால். வடக்குக்கிழக்கு மக்களின் வாக்குகள் அவரின் பைக்குள் சென்றுவிடும். அதுபோல தொண்டமானின் கட்சியினருக்கும் சில அமைச்சுப்பதவியை வழங்கினால் அவர்களின் வாக்குகளும் சந்திரிகாவுக்குக் கிடைக்கும். முஸ்லிம்களின் உரிமையை வழங்கினால் அவர்களின் வாக்குகளும் கிடைத்துவிடும். இவ்வாறு அனைத்து ஆதரவும் கிடைத்தால் அரசியலமைப்பை மாற்றியமைக்க அவருக்கு முடியும்.

ஆனால் ஜே.வி.பி.யினரின் நிலை? அவர்களில் அவருக்குப் பிரச்சினை கிடையாது. மேற்கூறப்பட்டவர்களின் முழு ஆதரவும் கிடைக்கும் பட்சத்தில் ஜே.வி.பி.யை அவர் முறித்து விடலாம். அன்று லலித்தின் ஐக்கிய தேசிய முன்னணியுடனான உறவை முதல் தடவையாக முறித்தார். மட்டுமன்றி அக்கட்சியை பல கூறுகளாகப் பிரித்தார். பின்னர் முஸ்லிம் காங்கிரஸை ரவூப் ஹக்கீம் அணி... பேரியல் அணியெனப் பிரித்தார். அஷ்ரப்பின் மரணத்துக்கு நட்ட ஈடு வழங்குமாறு கூறி பேரியல் அஷ்ரப்பை வலையில் மாட்டினார். இதனால் பேரியல் சந்திரிகாவுடனான பகைமையை மறந்து நீண்டகால நட்பை ஏற்படுத்திக் கொண்டார். ஹக்கீம் தலைமையிலான கட்சியையும் பின்னர் பிளவுபடுத்தி அதாவுல்லாவை கைகளில் போட்டுக் கொண்டார்.

அதன்பின்னர் லங்கா சமசமாஜக் கட்சியை இரண்டாக்கி பட்டி வீரக்கோனை தம்வசப்படுத்தினார். அவர் கட்டுக்குள் வராது போனதால் மேலும் பிளவு படுத்தி திஸ்ஸவிதாரணகேயை கைகளுக்குள் போட்டார். இன்று ஹெலஉறுமயவுக்குள் மோதலை ஏற்படுத்தி அதன் பயனையும் பெற்றுக்கொண்டார். இந்த வகையில் தனது அரசாங்கத்தை மட்டமாக்க நினைப்பவர்களுக்கெல்லாம் அவர் தண்டனை வழங்கியுள்ளார். ஜே.வி.பி.க்கும் அவர் தண்டனையை வழங்குவாரா?

உப்புல் ஜோசப் பர்ணாந்து
(லங்காதீப)
தமிழில் வடிவேல்

கூட்டணி போகின்ற போக்கில் அது நடக்கலாம் போலதோன்றுகின்றது. ஜே.வி.பி.யினது கர்ச்சித்தல் சந்திரிகாவுக்கு விருப்பமில்லை. கூட்டணித் தலைமைத்துவத்திலிருந்து அவர் நழுவியது அதனாலேயே தற்போது அவர் முடிவுகளை எடுப்பது கூட்டணிக்கு ஏற்றவகையில் அல்ல தனக்கேற்ற வகையில்ஆகும். கூட்டணி அரசு பதவிஏற்றதும் கூடிய அமைச்சர்களையும் பிரதியமைச்சர்களையும் நியமித்தது தொடர்பாக ரில்வின் சில்வா கடிதம் ஒன்றை அனுப்பி வெறுப்பைக்காட்டியதுடன் கூட்டணியிலிருந்து நீக்கி விடுவதாகவும் கர்ச்சித்தார். ஆனால் அமைச்சு எண்ணிக்கை அதிகரித்தே உள்ளது. ஆனால் ஜே.வி.பி. மௌனமாகியுள்ளது. சந்திரிகா ஜே.வி.பி.யினருடனான ஒப்பந்தம் பற்றியோ ஏனைய விவகாரங்கள் பற்றியோ பேச்சுநடத்துவது கிடையாது. ஜே.வி.பி. உறுப்பினர்களையும் தனிப்பட்டு சந்திப்பதில்லை. சில வேளை ஒருசில வைபவங்களில் அமைச்சரவையில் சந்திக்க நேரிடும் அன்று பொ.ஐ.முன்னணியின் அமைப்பாளர் சந்திப்பின் போது அவர் பிரசன்னமானார். இன்று கூட்டணி அமைப்பாளர்கள் கூட்டத்தின் போதுஅவர் சமுகமளிப்பது இல்லை. அவ்வாறு நோக்கும் போது பொ.ஐ.முன்னணியில் இடது சாரிக்கட்சிகளை கவனித்தது போன்றே இன்று கூட்டணியில் ஜே.வி.பி.யை கவனிக்கிறார்.

எனினும் ஜே.வி.பி வாயை மூடிக்கொண்டுள்ளது. விமல் வீரவன்ச கூட்டணியின் ஒப்பந்தப் படியே நடந்து கொள்கிறார். அதாவது தேர்தலில் வாக்களிக்க அடையாள அட்டை கட்டாயம் என்பதற்கு ஆதரவளித்தும், சபாநாயகருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்தும் அரசியலமைப்பை மாற்றி நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை மாற்றி சந்திரிகா தொடர்ந்து அரசியலில் இருப்பதற்கு ஆதரவு தெரிவிக்கிறார். அத்துடன் சந்திரிகா ஏற்படுத்திய சமாதான சபையின் ஆரம்பக் கூட்டத்தில் அவர் ஆற்றிய உரை அனைவரையும் கவர்ந்துள்ளது. அதாவது முன்னைய நாட்களைப் போல் புலிகளுக்கு எதிராக உரையாற்றாமல் சந்திரிகாவின் கூற்றோடு சார்பாக பேசியிருக்கின்றார். அது சந்திரிகாவை ஆதரித்து பேசியதாகக் கருதலாம். இதிலிருந்து ஜே.வி.பி.யை பிளவு படுத்த விமல் வீரவன்சவை சந்திரிகா பயன்படுத்துவார்போல் தோன்றுகிறது. அந்த இலக்கு எய்தப்படுமா இல்லையா என்ற போதிலும் சந்திரிகாவின் அரசியல்விளையாட்டுடன் சின்னப்பொடியன்களான ஜே.வி.பி.யின் விளையாட்டு செல்லுபடியாகாது.

● ● ●




# உணர்வு மிக்க செயற்பாடு





வன்னியில் விளையாட்டுத தரத்தை மேம்படுத்தும் வகையில் பல் வேறு போட்டிகள் மாவட்ட, பிரதேச ரீதியாக நடைபெற்று வருகின்றன.

இது அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளது. குறிப்பாக நாமும் ஒரு தரம் வாய்ந்த விளையாட்டுவீரர், தரம் வாய்ந்த அணி என்பதை வெளிக் கொணர்வதற்கு மேற்படி போட்டிகள் சிறந்ததோர் களமாக அமைந்து வருகின்றது.

கால்பந்து, கிரிக்கெட், கராத்தே என்பன இதில் முக்கியத்துவம் வகிக்கின்றன.

கால்பந்துச் சுற்றுப்போட்டிகள் பிரதேசங்களிலமைந்துள்ள கழகங்கள் நான் முந்தி நீ முந்தியென நடாத்த முன்வருவதும் நடாத்துவதும் இளைஞர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் கால்பந்தாட்டத்தின் முக்கியத்துவத்தையும், சுவையையும் அதிகரித்துள்ளது.

இது அண்மைக்காலத்தில் பல கழக அணிகளின் தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் திறமை வாய்ந்த வீரர்கள் பலரை இனம் காட்டியுள்ளது.

அண்மையில் ஸ்கந்தபுரம் ஸ்கந்தாவிளையாட்டுக் கழகம் கால் பந்து சுற்றுப் போட்டி ஒன்றை குறுகிய நாட்களுக்குள் நடாத்தி நிறைவுகண்டது.

இதில் வன்னியில் இருந்து 25 அணிகள் கலந்து கொண்டன. கால்பந்தாட்ட ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்த இச்சுற்றுப் போட்டியில் ஒருசில அணிகளைத் தவிர ஏனைய அணிகள் மிகவும் திறமையாக விளையாடியதை அவதானிக்கமுடிந்தது.

குறிப்பாக பூநகரி ஜொலி போய்ஸ் மற்றும் விக்னேஸ்வரா அணிகளின் ஆட்டம் பாராட்டும் படியாக அமைந்திருந்தது. இதில் ஜொலிபோய்ஸ் அணியின் பந்து கடத்தும் திறன் "சூட்டிங்பவர்" என்பன ஒரு சிறந்த அணியாவதற்கான அடித்தளத்தைக் கொண்டு அமைந்திருந்தது. ஆனாலும் அவ் அணியால் இறுதிப் போட்டிவரை முன்னேற முடியாது போனமை துரதிர்ஷ்டமே.

இவற்றைவிட முழங்காவில் விநாயகர் அணி, உருத்திரபுரம், திருநகர் அணிகளும் தமது திறமைகளை நன்கு வெளிப்படுத்தின.

இறுதிப் போட்டிக்கு புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா அணி அனைவரதும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நுழைய முழங்காவில் விநாயகர் அணிக்கு எதிர்த்தாடும் வாய்ப்புக் கிடைத்தது.

இறுதியில் விக்னேஸ்வரா அணி 1-0 என்ற நிலையில் வெற்றி பெற்று சம்பியனானது. இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக விக்னேஸ்வரா அணியின் பிரகாஸ் தெரிவானார். சிறந்த கோல்காப்பாளராக விநாயகர் அணியின் கோல்காப்பாளர் தெரிவானார்.



இப்போட்டி சிறப்பாக நடைபெற்று முடிந்தாலும் சில போட்டிகளில் மத்தியஸ்தர்களின் செயற்பாடு அதிருப்தி அளிப்பதாக காணப்பட்டது இது வீரர்களை குறிப்பிட்ட மத்தியஸ்தர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்துவதுடன் அவர் ஒரு சிறந்த நடுவர் அல்ல என்ற தோற்றப்பாட்டையும் ஏற்படுத்திவிடுகின்றது.

இதுபோன்ற செயற்பாடுகள் இனிவரும் போட்டிகளில் ஏற்படாத வகையில் மத்தியஸ்தர்கள் செயற்படுவது அவர்களது தார்மீக கடமையாகும்.

ஏனெனில் தற்போது விளையாட்டில் வீரர்களின் ஆர்வம் அதிகரித்துள்ள நிலையில் இச் செயற்பாடுகளை எவரும் அனுமதிக்க மாட்டார்கள். எனவே விளையாட்டு வீரர்களால் கடவுளாக மதிக்கப்படும் மத்தியஸ்தர்கள் தமது சேவையை செவ்வனே ஆற்றி நற் பெயரை வாங்கவேண்டும் என்பதே அனைவரதும் வேண்டுகோளாகவுள்ளது.

---

# ஏன் இந்தத் தடுமாற்றம்

தற்போது இந்திய அவுஸ்திரேலிய அணிகள் கலந்துகொள்ளும் TVS கிண்ணத்திற்கான டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று முடியும் தறுவாய்க்கு வந்துள்ளன.

ஏற்கனவே 35 வருடகால வரலாற்று வெற்றியை அவுஸ்திரேலிய அணி இலகுவாகப் பெற்றுக் கொண்டது. நாலு போட்டிகள் கொண்ட தொடரில் சென[...]னையில் நடைபெற்ற[...]போட்டியில் மட்டுமே இந்திய வீரர்கள் அவுஸ்திரேலியாவுக்கு நெருக்கடியை ஏற்படுத்



தினர்.எனினும் அவ்வணியின் வெற்றிவாய்ப்பை மழை கௌவியது. இரு அணிகளுக்கு இது பெருமளவு முக்கியமான போட்டியென்றாலும், இந்திய அணி வீரர்கள் இதனை முக்கியமாகக் கொள்ளவில்லையென்றே கருதமுடிகின்றது. காரணம் அவுஸ்திரேலிய அணிக்கு இந்தியா மட்டுமே அச்சுறுத்தும் ஒரு அணியாக விளங்கி வரும் நிலையில், நாக்பூர் போட்டியில் இந்திய அணி இரு இனிங்சிலும் மிகமிக சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தமை அவுஸ். அணிக்கு இனி எந்த அணியும் அச்சுறுத்தலாக இல்லை என்பதைப் புரியவைத்துள்ளது. 2001ஆம் ஆண்டில் நடைபெற்ற கல்கத்தா போட்டியில் இனிங்ஸ் தோல்வியை தவிர்க்க முயன்று இறுதியில் வெற்றிபெற்ற இந்திய வீரர்களே இப்போட்டியிலும் ஆடினர். எனினும் இவர்களின் பொறுப்பற்ற ஆட்டம் இந்தியக் கிரிக்கெட்டை எங்கோ கொண்டுசெல்லும் அபாயம் தோன்றியுள்ளது. எவ்வாறாயினும் மழை குறுக்கிடாமல் விட்டிருப்பின் இதுவரை நடைபெற்ற மூன்று போட்டிகளில் 1-1 என்ற நிலையில் இந்தியா சமன் செய்திருக்க முடிந்திருக்கும். அத்துடன் நாளை ஆரம்பமாகும் [...] மேலும் விறு[...]றாய் [...]யும்.



போட்டி விறுவிறுப்பான அமைந்திருக்க

ஆனால் இந்தியாவின் துரதிர்ஷ்டம் மழை ஒரு புறமும், காயங்காரணமாக அணித்தலைவர் கங்குலி, பதான், கர்பஜன்சிங், ஆகியோரின் வெற்றிடமும் அவுஸ்திரேலிய அணிக்கு வாய்ப்பளித்துவிட்டது.

35 வருட வரலாற்று வெற்றியை அவுஸ்திரேலியா பெற்றிருப்பினும் மேலும் ஒரு குறை இரு அணிகளுக்கும் நிகழ்ந்திருப்பதையும் அவதானிக்காமல் இருக்கமுடியாது. இதுவரை அணியை வழிநடத்திச் சென்று பல டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் வெற்றியைப் பெற்றுக்கொடுத்த அவுஸ் அணித்தலைவர் றிக்கிபொண்டிங்கிற்கு இந்த வரலாற்று வெற்றியை தன்கையால் சுவைக்கமுடியாது போனதாகும்.

மறுபக்கத்தில் நோக்கும்போது வரலாற்று வெற்றியைத் தவிர்க்கமுடியாதுபோய் ஒரு கறை இந்தியாவின் ராகுல்ராவிட் தலையில் விழுந்துவிட்டது. உண்மையில் இவ்விருவரும் பாவம் செய்தவர்களாகிவிட்டனர்.



இது இவ்வாறிருக்க நாளை ஆரம்பமாகவுள்ள நாலாவதும் இறுதியுமான மும்பாய் டெஸ்ட் போட்டியில் நாலு புது முகங்களை அறிமுகப்படுத்த இந்திய அணி திட்டமிட்டுள்ளது. இந்நால்வரும் உள்ளூர் போட்டிகளில் தமது திறமையை வெளிக்காட்டியவர்களாவர். அத்துடன் இந்திய ஏ அணியில் பதானின் சக வீரர்களாவர். இவர்களில் ஓரிருவர் சகலதுறை வீரர்களாகவும் கூறப்படுகின்றது. எனவே மும்பைப் போட்டி இந்நால்வருக்கும் மிகமுக்கியமான பரீட்சைக் களமாக அமையும். இவர்களின் செயற் திறனை அளவிட்டு தேசிய அணியில் நிரந்தரமாக இடம்பிடிக்க உதவும் போட்டி மட்டுமன்றி நாக்பூரில் இந்திய அணி அடைந்த தோல்விக்குப் பிராயச்சித்தம் தேடும் போட்டியாகவும் அமைவதால் அவுஸ் அணி என்ன செய்யும் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.


சிலவேளை இப்போட்டியில் இந்தியா புதிய வீரர்களின் துணையுடன் வென்றுவிடுமாயின் பழி இந்த மாற்றத்தை ஏற்கனவே ஏற்படுத்தாத தேர்வுக் குழுவையும் அணித்தலைவர் கங்குலியையுமே சென்றடையலாம்.

வடிவேல

---

# அமைதியான புயல்

வசிம்அக்ரம், சையிட்அன்வர், வக்கார்யூனிஸ், ஆகிய பிரபல வீரர்கள் பாகிஸ்தான் கிரிக்கெட்டிலிருந்து விடைபெற்று சென்ற பின்னர் தமது தேசிய சொத்தாகக் கருதும் கிரிக்கெட்டின் எதிர்காலம் இளம் வீரர்களிடம் சென்றடைந்துள்ளது. அதனைக் கையேற்ற இளம் வீரர்களில் சொகைப் மாலிக் முக்கியமானவர் எனக் கூறலாம். துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் களத்தடுப்பிலும் அவருக்கு நிகர் அவரே. ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டி களிலும், அவர் இன்றியமையாத வரானார். இடது கை வீரரான அவரை கிரிக்கெட்வல்லுநர் என்றே கூற முடியும். பாகிஸ்தானில் நடை பெற்ற 'பாக்டெல்' கிண்ண முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் சிறிலங்காவிடம் 201 ஓட்டங்களால் தோல்வியடைந்தாலும் இவரின் துடுப்பாட்டம் (48,59) சிறப்பாகவிருந்தது.



கடந்தஆசியக் கிண்ணப் போட்டிகளிலும் இவர் இந்தியாவுக்கெதிராக 143 ஓட்டங்களைப் பெற்றார். அத்தொடரில் அவரே அதி கூடிய (316) ஓட்டங்களைப் பெற்ற வீரரானார்.

இவர் 15ஆவது வயதுப் பிரிவில் பாகிஸ்தான் கிரிக்கெட் உலகில் அறிமுகமானார் பின்னர் 19வயது அணியிலும் "ஏ" அணியிலும் இடம்பிடித்தார்.

இவரின் ஆசிரியர் சக்லைன் முஸ்டாக் ஆவார். இதன்மூலம் சொகைப் மாலிக் முஸ்டாக்கின் மறுபிறவியாக கருதப்படுகிறார். இவர் 1999ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளுடனான போட்டியின் மூலம் சர்வதேச மட்டத்தில் அறிமுகமானார். அப்போது அவரின் வயது 17 மட்டுமே. ஆரம்பத்தில் 10 இலக்க வீரராகக் களம் இறங்கினாலும் துரிதமாக ஓட்டங்களைப் பெறுவதால் 06 இலக்க வீரராக உயர்த்தப்பட்டு கடைசியா 03 ஆம் இலக்க வீரராக மிளிர்ந்தார்.

சிறிலங்காவின் முரளிதரனை தவிர துஸ்ரா பந்துவீச்சில் இன்னும் ஒரு வீரரானார். எனினும் இந்தப்பந்து வீச்சிலும் குறை காணப்பட்டு சந்தேகம் எழும்பியது.

கடந்த ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற கவுண்டி அணிகளுக்காகவும் இவர் ஆடியுள்ளார்.

2007 ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளில் இவரை பெரும் துருப்பாக பயன்படுத்த பாகிஸ்தான் கருதியுள்ளது. இதுவரை நடைபெற்றதெல்லாம் கடவுள் ஆசியினால் எனக்கூறும் சொகைப்மாலிக் விளையாட்டு என்ற பயணத்தில் இது ஆரம்பமே என்கிறார்.

# தேசிய ஆலோசனை பேரவைக் கூட்டம் எதிர்க்கட்சிகளால் முற்றாக புறக்கணிப்பு!

முஸ்-காங்கிரஸ் மாற்றுக்குழு பங்கேற்பு

(கொழும்பு)

**சனாதிபதி சந்திரிகாவினால் உருவாக்கப்பட்ட சமாதானத்திற்கும் நல்லினக்கத்திற்குமான தேசிய ஆலோசனைப் பேரவையின் அரசியல் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது கூட்டணிக்கட்சிகளைத் தவிர சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் மாற்றுப் பிரதிநிதிகள் சிலர் மட்டுமே கலந்துகொண்டனர்.**

நேற்று நடைபெற்ற இந்தப் பேரவையின் அரசியல் குழுக் கூட்டத்தில் ஐக்கியதேசியக்கட்சி, இலங்கைத்தமிழரசுக்கட்சி, ஜாதிக ஹெல உறுமய ஆகியகட்சிகளின் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

இக் கூட்டத்தில் சனாதிபதி உரையாற்றுகையில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் பொழுது பராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்டறியும் நோக்கிலேயே சமாதானத்திற்கும் தேசிய நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசணைச் சபையின் அரசியல் குழு ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்; சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாக அரசியல் கட்சிகள் கொண்டுள்ள மாறுபட்ட கருத்துக்களை முன்வைக்க இதன் மூலம் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக அவா கூறியுள்ளார்.

தேசியஆலோசணைச் சபையில் அரசியல் சமய, சிவில் சமூகம என மூன்று உப குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக சனாதிபதி கூறியுள்ளார்.

இதேவேளை நேற்று நடைபெற்ற அரசியல் குழுக் கூட்டத்தின் இணைத்தலைமைத்துவம் பிரதமருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் சனாதிபதி கூறியுள்ளார்.

## சனாதிபதித் தேர்தல் திகதியை நிர்ணயிக்கும் உரிமை தேர்தல் ஆணையாளருக்கே உண்டு

### - ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

அடுத்த சனாதிபதித் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளரே திகதியை குறிக்கும் பொறுப்பை கொண்டுள்ளார் இதனை விடுத்து அமைச்சர் மங்கள சமரவீர அவ்வாறான பொறுப்பை ஏற்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. சனாதிபதி ஒருவர் முதன் முறையாகப் பதவி வகிக்கும் நிலையில் அவர் தமது பதவிக்காலம் முடிவடையும் முன்னர் தேர்தல் ஆணையாளரை தேர்தலை நடத்துமாறு கேட்கலாம் ஆனால் இரண்டாவது தடவையாக அவர் பதவி வகிக்கும் போது சனாதிபதி ஒருவர் சனாதிபதித் தேர்தலை நடத்துமாறு கேட்கமுடியாது இதனை உணராத அமைச்சர் மங்கள சமரவீர சனாதிபதி நினைத்தால் சனாதிபதித் தேர்தலை நடத்தலாம் எனக்கூறியது ஏற்க முடியாதது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுபபினர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் தெரிவித்தார்

இதேவேளை டீசல் மற்றும் பெற்றோலின் விலையை அரசாங்கம் மேலும் 4 ரூபாவால் உயர்த்த முனைப்பு மேற்கொண்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன இந்த மாநாட்டில் தெரிவித்தார்

## 75 நாட்களில் அறுவடை செய்யும் புதிய நெல்லினம் கண்டு பிடிப்பு

உலகில் முதல் தடவையாக 75 நாட்களில் அறுவடை செய்யக்கூடிய புதிய இன நெல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பத்தல கொட விவசாய ஆராய்ச்சி நிலைய பணிப்பாளர் சுமித் அபேசிறிவர்தன தெரிவித்துள்ளார்.

இந் நாட்டில் வரண்ட கால நிலை பிரதேசங்களில் இதனைப் பயிர் செய்யலாம் எனவும் BG 250 என இற்கு பெயரிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சாதாரணமாக ஏக்கருக்கு 125 புசல் நெல் அறுவடை செய்யலாம் எனக் கூறும் அவர் இதனை சிறந்த முறையில் பராமரிப்பின் 220 புசல் வரையான விளைச்சலைப் பெறலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நாற்றின் வீரியத்தை மேம்படுத்தும் ஆய்வுகளை மேற்கொண்டு 50 வீத விளைச்சலை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## வருத்தம் தெரிவிப்பு

மிகவும் பொறுப்புடனும் தியாக சிந்தையுடனும் அமைத் துக் கொள்ளப்பட்ட கூட்டணி பிரிந்து விடும் வகையில் தமது ஊடகத் துறை செயலர் வீரவன்ச ஆற்றிய உரை அமையுமாயின் அதற்காகத் தமது வருத்தத்தை தெரிவித்துக் கொள்வதாக ஜே.வி.பி எம்பிக்களும், பிரதியடைச்சர்களும் கூட்டாக அறிந்துள்ளனர்.

## முறையான பொருளாதாரக் கொள்கை தற்போதைய அரசிடம் கிடையாது

### -பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

எமது ஆட்சிக் காலத்தின் போது எரிபொருட்களின் விலை நியாயமான அளவில் வைத்திருக்க முடிந்ததென ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது. ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுபபினர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் இது தொடர்பாக மேலும தெரிவிக் கையில்;

ஐ.தே.கட்சி அரசு அப்போது முறையான பொருளாதாரத் திட்டமிடல் கொள்கையைப் பின் பற்றியதால் இது சாத்தியமானதென்றும் தற்போதைய அரசிடம் அத்தகைய திட்டங்கள் எதுவும் இல்லையெனவும் தெரிவித்துள்ளார்.

## பௌத்த பிக்குகளின் ஆடை களைவு கனேடியத் தூதரங்கம் மன்னிப்புக் கோரியது

விசா பெறவந்த பௌத்த பிக்குமார்கள் மூவர் மீது 'அந்தராக்ஸ்' பீதி காரணமாக தாம் மேற்கொண்ட நடவடிக்கை குறித்து கொழும்பிலுள்ள கனேடிய தூதரகம் மன்னிப்பு கோரியுள்ளது. இந் நடவடிக்கையானது எத்தகைய உள்நோக்கமும் கொண்டது அல்ல எனவும் 'அந்ராக்ஸ்' அச்சம் காரணமாகவே பாதுகாப்பு நலன் கருதி இதனை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டதெனவும், பௌத்த பிக்குகளின் ஆடைகள் அவர்களது அனுமதியுடனே அகற்றப்பட்டு பௌத்த துறவிகளுக்குரிய காவி உடை வழங்கப் பட்டதெனவும் அந்த அறிக்கையில் இது பற்றி மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ஜாதிக ஹெல உறுமய செயலர் புலிகளுடன் பேச விருப்பம்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் எம்.பியுமான தம்மாலோகதேரர் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவுடன் கருத்து முரண்பட்டுள்ள தம்மாலோகதேரர் தற்போது ஏனைய கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றார். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இவர் இரு தடவைகள் சந்தித்துப் பேசியுள்ளார். கடந்த 30ஆம் திகதி மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும் எர்பி.யுமான மனோகணேசனையும் தம்மாலோகதேரர் சந்தித்துப் பேசியுள்ளார். இதன் போது தமிழ்ச் செல்வனை சந்தித்துப் பேசுவதற்கான தனது விருப்பத்தினை தேரர் தெரிவித்துள்ளார். இது குறித்து புலிகளுடன் கலந்துரையாடி தமிழ்ச் செல்வனை சந்திக்க வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மனோகணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

சனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாக சனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்த தேரர் திட்டமிட்டுள்ளதால் 2005 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டுமென ஐ.தே.க வலியுறுத்தி வருகின்றது. 2006 ஆம் ஆண்டு நடைபெறும் என்று அரசாங்கம் கூறுகின்றது. இவ் விடயம் தொடர்பில் சனாதிபதியுடனும், எதிர்க்கட்சியுடனும் பேசி ஒரு இணக்கப்பாட்டினை ஏற்படுத்த தம்மாலோகதேரர் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## 7 ஆம் ஆண்டின் நினைவுகளில்...



தோற்றம் 07 02 1978

வீரச்சாவு 02 11 1997

### லெப். புலித்தேவன்

(ஜெயபால சேகரம்பிள்ளை - செந்தூர்க்குமரன்)

தனிப்பனை - வடக்கு செம்பியன்பற்று

வட்டுவாக்ல் பகுதியில் தரை தட்டிய சரக்குக் கப்பல் மீதான விமானக் குண்டு வீச்சின் போது

புள்ளிமானெனத் துள்ளிக் குதித்து
பள்ளி செல்லும் வயதினிலே
கடலணியின் புலியெனவே - நீ
கரிகாலனணி இணைந்தாய்!
புலி வீரர் புகழ் வாழப் புலித்தேவன் -என
புது நாமம் நீயும் பூண்டாய்! - அன்று
கரை ஒதுங்கும் கலமதனைக்
காப்பதுன் கடமையென நீயும் சென்றாய்!
கலமதனில் இடியெனவே வெடிவீழ
காவியமாகி விட்டவுன் நினைவுகளை
கரைந்து விட்ட ஏழாண்டுகளின்
நினைவுகளில் வாடி நின்று
அஞ்சலிக்கின்றோம்., நாளை - வரும்
தமிழீழம் என்று!!!

**இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூறுவதுடன் அனைவரினதும் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்**

(5208)

குடும்பத்தினர்



**நாகபூசணி அம்மன் திருமணசேவை**

எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யாதிருக்கும் பெண்கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக் கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய்யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலரின் ஜாதகங்களும் உள்ளன.

மற்றும் ஜாதகம், புகைப் படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமுமோ தொடர்பு கொள்ளவும்.

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 077 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- sri nagapusani amman thirumanasavai @yahoo.com.

(சி-10580)



## 5 ஆம் ஆண்டு நினைவு



பிறப்பு 24 06 1976

வீரச்சாவு 02 11 1999

### 2 ஆம் லெப். வண்ணன்/கனிமுகிலன்

(நல்லையா ~ ரகுசீலன்)

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி

தன்மானத் தமிழரின் விடுதலைக்காய்
தானைத் தலைவன் அணியில்
இணைந்து களங்கள் பல கண்டு
பகைவர்களை புறமுதுகிட வைத்த
புலிமறவர் சேனையில் புயலாய்
புறப்பட்டு செங்களத்தின் வீரத்துடன்
போராடி தாய் மண்ணை முத்தமிட்டுச்
சென்று தேசத்தின் காவல் தெய்வங்களாய்
உறங்கிக் கொண்டிருக்கும் ஆயிரமாயிரம்
மாவீரர் வரிசையில் இணைந்து விட்ட
எங்கள் குடும்பத்தின் குல விளக்கே
நீ எம்மை விட்டுப் பிரிந்து மீளாத் துயிலில்
உறங்கிக் கொண்டிருந்தாலும் உன்
நினைவுகள் என்றும் எம் இதயத்தை
விட்டகலாது உன் பிரிவால்
துயருற்றுக் கொண்டிருக்கும்_

தகவல்
ந.ரகுதீபன்
ஆயப்பகுதி
புளியங்குளம்

குடும்பத்தினர்
நல்லையா
குமாரபுரம்
முள்ளியவளை

(5237)

# குறைந்த பட்ச பொது செயல்திட்டத்திலிருந்து
# மத்திய அரசின் பல முடிவுகள் விலகியுள்ளன

## -இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குற்றச்சாட்டு

இந்திய அரசின் பல தீர்மானங்கள் கூட்டணி யின் குறைந்தபட்ச பொது செயல்திட்டத்தின் வழியிலிருந்து விலகியுள்ளன. என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய முன்னணி அரசின் கடந்த 5மாத கால செயற்பாட்டை இரு விதமாக வர்ணித்துள்ளது. பல பிரச்சினைகளில் அரசு மேற் கொண்ட தீர்மானங்கள் தவறானவை என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

உச்ச வரம்பு அல்லது பூதானத்தின் கீழ் இனங்கண்ட நிலங்களை மறுவிநியோகம் செய்ய விரைவாக அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் அத்தகைய நிலங்களை வசப்படுத்திக் கொண்டு மறு விநியோகம் செய்ய இயக்கமொன்றை சி.பி.ஐ மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படலாம் என்றும் கூறியுள்ளது பல பிரச்சினைகளில் இடது சாரிக் கட்சிகளை கலந்தாலோசிக்கவில்லையென்றும் எனினும் பொது செயல்த் திட்டத்தை செயற்படுத்தி அதன் வரம்புக்குள் செயல்ப்படும் வரை அரசுக்கு முழு ஆதரவையும் இடது சாரிக்கட்சிகள் தொடர்ந்து அளிக்குமென்றும் தெரிவித்துள்ளது அக்கட்சி

பாராதிய ஜனாதவிற்கெதிராக மதசார்பற்ற சக்திகளின் ஒருங்கிணைந்த போராட்டம் தொடர வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளது.

இக் கட்சியின் தேசிய குழுவின் 2 நாள் கூட்டம் டில்லியில் நடைபெற்றது.இதன் பின்பு செய்தியாளர்களிடம் பேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.பி.வரதன் பாராளுமன்ற மற்றும் மகாராஸ்டிய மாநில தேர்தலில் ஏற்பட்ட தோல்வி பாரதிய ஜனதாக் கட்சிக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளதெனக் கூறினார். ஆயினும் பாராதிய ஜனாதாவை குறைத்து மதிப்பிட வேண்டாமென மதசார்பற்ற கட்சிகளை அது கேட்டுக்கொண்டார்.

மேலும் வரவிருக்கும் பீகார் மற்றும் ஜார்க்கண் மாநில சட்டமன்றத் தேர்தலிலும் மத வாத சக்திகளுக்கெதிராக மதச்சார்பற்ற சக்திகள் ஒன்று பட்டு செயற்பட வேண்டுமென்றும் வரதன் வலியுறுத்தியதுடன் மீண்டும் ஆட்சியைப்பிடிக்கும் நம்பிக்கையில் பாராதிய ஜானதா தற்போது இந்துத்துவக் கொள்ளையை தீவிரமாகக் கடைப்பிடிக்கிற தென்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

# கன்னியாகுமரி குளைச்சல் பிரதேசத்தில் துறைமுகம் அமைக்க கோரிக்கை

(சென்னை)

கன்னியாகுமரி மாவட்டம் குளைச்சல் பிரதேசத்தில் திட்டமிட்டபடி துறைமுகம் அமைப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர். மேலும் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் திட்டம் இடைநடுவில் கைவிடப் பட்டதால் தமது தொழிலை சிிவர செய்ய முடியாதுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இயற்கையாக அமைக்கப் பெற்ற இந்த குளைச்சல் மீன் பிடிக் கடற்கரை முந்தைய தி.மு.க ஆட்சியின் போது இங்கு பெரியளவில் துறைமுகம் அமைக்க மலேசிய அரசுடன் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதனையொட்டி ஒரு மீன் பிடித்துறை முகாம் அமைக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் 3 ஆண்டுகளாக துறைமுகம் அமைக்க முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லையென்று குமாரி மாவட்ட மீனவர்கள் புகார் செய்துள்ளனர்.

சேது சமுத்திரத்திட்டம் நிறைவேற்றப்ப்டவிருக்கும் நிலையில் குளைச்சலில் துறைமுகம் அமைக்கப்பட்டால் எண்ணற்ற பலன் கிடைக்கும் எனவும் கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்துறைமுகத்தினை பெரிய துறைமுகமாக்கி மீன்பிடி தொழிலுக்கு வழிசெய்தால் குமரி மாவட்ட மீனவர்களின் உதவியில் கிடைக்கும் 200 கோடி ரூபா வெளிமாநிலங்களுக்குச் செல்லாமல் தடுக்க முடியும் ...ம் நிபுணர்கள் தெரிவிக்கின்

அத்தோடு கன்னியகுமரி மாவட்டமும் ஏற்றுமதி இறக்குமதி தொழில்களில் தலைதூக்கும் என்பது மீனவர்களின் நம்பிக்கை.

# எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் வெடி விபத்து

(புதுடில்லி)

குஜராத் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் கடந்த வெள்ளிக்கிழமை வெடிவிபத்து ஏற்பட்டது.

இந்த வெடிவிபத்துச் சம்பவத்திற்கு மனிதர்களின் தவறோ நாச வேலையோ காரணமல்ல என்று இந்திய எண்ணெய்க் கம்பனி கூறியுள்ளது.

மூன்று உறுப்பினர்களடங்கிய தொழில் நுட்ப நிபுணர்கள் குழு நடத்திய முதல் நோக்கு புலனாய்வில் இது தெரிய வந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே டில்லியில் இருந்து சென்ற உயர் அதிகாரிகள் குழு நடத்திய மற்றொரு விசாரணையிலும் சுத்திகரிப்பு ஆலையின் இயந்திரக் கோளாறு வெடி விபத்துக்குக் காரணமல்ல என்றும் தெரிய வந்துள்ளது.

## தமிழ் நாட்டில் பலத்த மழை

தமிழ் நாட்டில் பலத்த மழை பெய்து வருவதன் காரணமாக 2 குழந்தைகள் உட்பட 8 பேர் பலியா கியுள்ளனர். திருவாரூர், தஞ்சாவூர் நாகப்பட்டிணம் மாவட்டங்களின் காவிரி டெல்டா பகுதிகளில் சுமார் ஒன்றறை இலட்சம் ஏக்கர் நிலப் பரப்பு நீரில் மூழ்கியிருப்பதாக வும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்.விமானப்படைத் தளபதியாக சதீந்திரா பால்திரபால் தியாகி

(புதுடில்லி)

இந்திய விமானப்படையின் புதிய தலைவராக எயார்மார்ஷல் சசீந்திர பால்திரபால் தியாகி நியமிக்கப்பட்டுள்ளார் இவர் தற்போது மேற்கரங்கின் விமனாப்படைத் தளபதியாக பணியாற்றிகின்றார்

தற்போதைய விமானப்படைத்தளபதி கிருஷ்ணசாமி டிசம்பர் மாதம் 31ஆம் திகதி பதவியிலிருந்து ஒய்வு பெறுவதையிட்டே புதிய தளபதி நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பீகார் - மணிப்பூர் எல்லையில் நில நடுக்கம்

(புதுடில்லி)

பீகார்,மணிப்பூர் எல்லையில் நேற்று முன்தினம் மாலை வேளை நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இது ரிச்டர் அளவுகோலில் 4 ஆக பதிவாகியுள்ளபோதும் இதன் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றி இன்னமும் எதுவும் தெரியவரவில்லை.

# 55 ஆயிரம் கோடி ரூபா செலவில் நதிகள் இணைபுத்திட்டம் அமுல் செய்ய முடிவு

(புதுடில்லி)

55 ஆயிரம் கோடி ரூபா செலவிலான மாபெரும் நதிகள் இணைப்புத்திட்டத்தை அமுல் படுத்த தொடர்ந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்று உச்சநீதி மன்றத் திடம் இந்திய மத்திய அரசு நேற்றுத் தெரிவித்துள்ளது.

தீபகற்ப நதிகளின் இணைப்பில் கவனம் செலுத்தப்படும் இந்திய சொலிசிட்டர் ஜெனரால் உச்சநீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களுடன் இந்த விடயம் குறித்து கலந்துரையாடப்படும்.

இது குறித்து பொதுக்கருத்துக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் பேசி அவற்றிற்கிடையிலுள்ள பிணக்குகளைத் தீர்க்க இந்தக் குழு முயற்சி செய்து இம் மாத மத்திக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பீகார் ராஜஸ்தானிற்கு புதிய ஆளுநர்கள் நியமனம்

(புதுடில்லி)

ஜார்க்கண் மாநில ஆளுநர் ஜெய்பிரகாஸ் பீகார் மாநிலத்தின் தற்காலிக ஆளுநராக நேற்றுப் பட்டனாவில் பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முன்னாள் ஆளுநர் ராமஜெய இராஜிநாமாச் செய்ததையடுத்து ஜெய்பிரகாசிற்குக் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை உத்தரப்பிரதேச ஆளுநர் ராஜஸ்ராஜேஸ்கர் ராஜஸ்தானின் தற்காலிகஆளுநராகப் ப்தவிப்பிரமாணம் செய்துகொண்டார் ராஜேஸ்கர். உத்தரப்பிரதேச ஆளுநர் பதவியுடன் இந்தக் கூடுதல் பொறுப்பையும் வகிப்பார்.


## ஆறாம் மாத நினைவலைகள்

தாயக மண்ணில் 1977 - 10 - 19



வீரச் சாவு 2004 - 05 - 02

## லெப்.இலக்கியன்

(அகஸ்ரின் வசந்தரூபன்)

**மாதங்கள் கழிந்தன ஆறு.**
**மறக்குமா எம் நெஞ்சம் கூறு**
**சிரித்தபடி உந்தன் முகம் எம் மனதில்**
**அழவைத்துச் சென்றதேனோ இவ்வயதில்**

உன் ஆன்மா இளைப்பாறிக்காக பிரார்த்திக்கும்,
குடும்பத்தினர்,
இல.213, சிவசுந்தரம் வீதி,
வட்டக்கச்சி.

(4929)



## வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (நியாப்) கட்டம் - II
## சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடம் - 13

மேற்படி பதவி வெற்றிடத்துக்கான விளம்பரம் 16.10.2004 ஈழநாதம் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

அதில் 9.3 இல் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புவியியல், கணக்கீடு, வர்த்தகம், பொருளியல், வணிகக்கல்வி ஆகிய பாடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் எட்டு (08) வருடங்களில் சமூக உணர்வூட்டல் அல்லது அதனுடன் தொடர்புபட்ட துறைகளில் அனுவம் பெற்றிருத்தல் வேண்டும் என விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. அதில் எட்டு வருட அனுபவம் தேவையில்லை என்பதையும் ஏற்கனவே உள்ள அனுபவங்களின் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

இப் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 06.11.2004 இற்கு முன்னதாக பதிவுத் தபாலில் அரச அதிபர்,கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கச்சேரி, கிளிநொச்சி மாவட்டம்.

(10293)

# கராச்சி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணிக்கு 6 விக்கெட் வெற்றி



சிறிலங்கா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று கராச்சியில் நிறைவுபெற்ற இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

137 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி இறுதிக்கட்டத்தில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதன்மூலம்இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-1 என்ற நிலையில் இரு அணிகளும் சமன் செய்தன.

பாகிஸ்தான் அணியில் இரண்டாவது இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய சொகைப்மாலிக் ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களையும் அப்துல்ரசாக் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சமிந்தவாஸ், ரங்கணகேரத் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


சிறிலங்கா அணி முதல் இனிங்ஸ் 208 ஓட்டங்கள் இரண்டாவது இனிங்ஸ் 406 ஓட்டங்கள். சிறிலங்கா அணியின் இரண்டாவது இனிங்சில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய குமார் சங்கக்கார 138 ஓட்டங்களையும் சனத்ஜெயசூரிய 107 ஓட்டங்களையும், சமிந்தவாஸ் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணிசார்பாக தனேஷ் கனேரியா 118 ஓட்டங்களைக் கொடுத்து 7விக்கெட்டுக்களைக் கைப்பறினார்.

பாகிஸ்தான் அணி முதல் இனிங்சில் 478 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் யுனிஸ்கான், 124 இன்சமாம் உல்-ஹக் 117ஓட்டங்களை அதிகபட்டசமாகப் பெற்றனர்.பந்துவீச்சில் பெர்னான்டோ, சமிந்தவாஸ் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய கனேரியாவும் தொடரின் சிறப்பாட்டக்காரராக சனத்



ஜெயசூரியாவும் தெரிவாகினர்.

மேற்படி வெற்றி மூலம் பாகிஸ்தான் மண்ணில் மூன்று டெஸ்ட் தொடரைக் கைப்பறி ஹட்ரிக் சாதனையை ஏற்படுத்தும் சிறிலங்காவின் முயற்சியை பாகிஸ்தான் அணியினர் தடுத்துநிறுத்தினர்.

# நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முரளி கிளிநொச்சிக்கு இன்று விஜயம்



சிறிலங்கா அணியின் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் இன்று கிளிநொச்சிக்கு வருகைதர இருக்கின்றார்.

கிளிநொச்சி வரும் அவர் பூநகரியில் உள்ள வைத்தியசாலைக்கு விஜயம்செய்து அங்கு காலை ஆகாரம்வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

ஐக்கிய நாடுகள்சபையின் உலக உணவுத்திட்டதின் நல்லெண்ணத்தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள முரளிதரன் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தின் அச்சுவேலிப் பிரதேசத்துக்கு விஜயம் செய்வதாக உலகஉணவுத்திட்ட இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

அச்சுவேலிப்பகுதியில் உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் தாய்சேய் சிகிச்சை நிலையத்தை சென்று பார்வையிட்ட முரளிதரன் அருகில் பாடசாலைஒன்றுக்கு விஜயம் செய்து தனது சொந்தச் செலவில் கிரிக்கெட் உபகரணங்களை வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நிரந்தர சமாதானம் ஏற்பட்டு எமது உரிமைகளை வென்றெடுப்பதன் அவசியம் குறித்தும் சகல சமூகங்களும் ஒற்றுமையாக வாழவேண்டியதன் அவசியம் குறித்தும் நேற்று மாலை நல்லூரில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

# எனது திறமை முடிவுக்கு வந்து விட்டது ருமேனிய கால்பந்து வீரர் வேதனை

கடந்த மாதம் ஊக்கமருந்து பாவித்தார் என்ற பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட ருமேனிய கால்ப்பந்தாட்ட வீரர் அது தனக்குப் பெரும் அவமானம் என்றும் தனது திறமை முடிவுக்கு வந்து விட்டதாகவும் வேதனை அடைந்துள்ளார்.

பிரிமியர்லீக் கழகத்தைச் சேர்ந்த அட்ரியா முத்து என்ற வீரரே தற்போது இரண்டு வருடம் சர்வதேசப் போட்டியிலிருந்து தடைசெய்யப்பட்டவராவர். செல்சிய அணிக்காக விளையாடும் இவர் தனது திறமை முடிவுக்கு வந்து விட்டதாகவும் தனக்காக ஒன்றும் விட்டுவைக்கப் படவில்லை எனவும் அவர் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு கவலையுடன் தெரிவித்துள்ளார்.

கழகம் தன்னை நீக்கிவிடும் என்றோ சம்பளம் வழங்கும் என்றோ தான் எதிர்பார்த்திருக்கவில்லை என்றார்.

ஆயினும் ஏனைய வீரர்களைப் போன்று முத்து தண்டனையிலிருந்து மீண்டும் அவர் அணிக்கு திரும்பும் உரிமையிருப்பதாக ஆர்சனல் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## தெரிவு கால்பந்துப்போட்டி பூநகரியில் ஆரம்பம்

மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கான தெரிவுப் போட்டிகள் பிரதேசரீதியாக நடைபெற்று வருகின்றன.

இதனடிப்படையில் பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட 14 விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றும் உதைபந்தாட்டப்போட்டி எதிர்வரும் 06.11.2004 ஆம் நாள் காலை 8.00 மணியளவில் ஆரம்பமாகின்றது. (ச)




# மாவீரர் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்துப் போட்டி இம்மாதம் ஆரம்பம்



2003 ஆம் ஆண்டு வெற்றி அணி


இம்மாதம் கிளிநொச்சியில் நடைபெறவுள்ள மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ளது. இதில் கிண்ணத்தை சுவீகரிக்கப்போகும் அணி எது என்ற அங்கலாய்ப்பு ரசிகர்களிடையே கேள்வியை எழுப்பியுள்ளது.

மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டத்தில் 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற சுற்றுப் போட்டியில் உருத்திரபுரம் சந்திரோதயா அணி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதேபோன்று 2004 ஆம் ஆண்டுக்கான மாவீரர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரிக்கப்போகும் அணி எது எனும் கேள்வி எழுந்துள்ளது. இதற்காக கிளிநொச்சி மாவட்டத்தில் சகல உதைபந்தாட்ட அணிகளும் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. இதேவேளை பதிவுகளை மேற்கொள்ளாத அணிகளும் இச்சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பிக்க முடியுமென தமிழீழ விளையாட்டுத்துறையினர் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

# மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த காரத்தேபோட்டி-2004 காந்திநிலையம், குருகுலம் மாணவர்களுக்கு அதிக பதக்கம்





மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த கராத்தே சுற்றுப்போட்டியில் பதக்கம் வென்றவர்களை மேற்படி இரு படங்களிலும் காணலாம்.

தமிழீழ விளையாட்டுத்துறையினர் நடாத்திய 2004, மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த தமிழீழ தேசிய கராத்தே சுற்றுப் போட்டியில் எட்டு மாவட்டங்கள் பங்கு கொண்டன. இவ் எட்டு மாவட்டத்திலும் முல்லைமாவட்டம் 117 புள்ளிகள் பெற்று 01ம் இடத்தையும், கிளிநொச்சி மாவட்டம் 115 புள்ளிகள் பெற்று 02ம் இடத்தையும், யாழ் மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றது.இப்போட்டிகளில் பங்குபற்றி பதக்கங்களை வென்ற குருகுலம், காந்திநிலையம் வீர வீராங்கனைகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பாராட்டுக்களை தெரிவித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடாத்தும்குருகுலம்,காந்திநிலைய மாணவர்களே மொத்தம் 36 பதக்கங்களில்26பதக்கங்களைவென்று மாவட்ட ரீதியில் அதிக பதக்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். கிளிநொச்சி மாவட்டத்திற்குரிய வெற்றிக்கேடயத்தினை கிளிநொச்சி மாவட்ட கராத்தே சங்கத் தலைவரும், இம் மாணவர்களின் கராத்தே பயிற்சி ஆசிரியருமாகிய சி.விஜயராஜ் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

**18 வயதிற்கு கீழ் ஆண்கள்** (கிளி/காந்திநிலையம்

| | | | | |
|---|---|---|---|---|
| 01) | கி.சதீஸ் | 33 - 36 | 01ம் இடம் | தங்கப்பதக்கம் |
| 02) | ச.நிஷாந்தகுமார் | 54 – 57 | 01ம் இடம் | ,, |
| 03) | ச.பிரசாத் | 48 – 51 | 01ம் இடம் | ,, |
| 04) | சு.தினேஸ் | 30 கீழ் | 02ம் இடம் | வெள்ளிப்பதக்கம் |
| 05) | து.சுஜீபன் | 51 - 54 | 02ம் இடம் | ,, |
| 06) | வ.பாலசுந்தரம் | 48 - 51 | 02ம் இடம் | ,, |
| 07) | வெ.உதயகுமார் | 39 - 42 | 02ம் இடம் | ,, |
| 08) | சு.சுதாகரன் | 45 - 48 | 03ம் இடம் | வெண்கலம் |
| 09) | செ.சுதர்சன் | 33 - 36 | 03ம் இடம் | ,, |
| 10) | சுதர்ன் | 33 - 36 | 03ம் இடம் | ,, |
| 11) | சி.தர்மபாலன் | 42 - 45 | 03ம் இடம் | ,, |
| 12) | க.அருளானந்தம் | 25 - 30 | 03ம் இடம் | ,, |

**18 வயதிற்கு கீழ் பெண்கள்** (கிளி/குருகுலம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01) | செ.செல்விகா | 28 - 30 | 01ம் இடம் | தங்கப்பதக்கம் |
| 02) | செ.ஜெயராணி | 30 - 33 | 01ம் இடம் | ,, |
| 03) | த.கலைச்செல்வி | 34 - 36 | 01ம் இடம் | ,, |
| 04) | செ.றிபோனாமேரி | 36 - 39 | 01ம் இடம் | ,, |
| 05) | து.விஜயல்'மி | 39 - 41 | 01ம் இடம் | ,, |
| 06) | ச.செல்வகுமாரி | 45 - 48 | 01ம் இடம் | ,, |
| 07) | க.வினோஸ்ந்தி | 48 - 51 | 01ம் இடம் | ,, |
| 08) | த.றாதிகா | 36 - 39 | 02ம் இடம் | வெள்ளிப்பதக்கம் |
| 09) | க.தனுஸ்யந்தி | 51 - 54 | 02ம் இடம் | ,, |
| 10) | ப.வசந்தவேணி | 39 - 36 | 03ம் இடம் | வெண்கலப்பதக்கம் |
| 11) | சி.றாஜினி | 54 - 57 | 03ம் இடம் | ,, |

காட்டா போட்டிக் குழு

| | | | |
|---|---|---|---|
| 01) | க.தனுஜ்யந்தி | 02ம் இடம் | வெள்ளிப்பதக்கம் |
| 02) | த.கலைச்செல்வி | 02ம் இடம் | ,, |
| 03) | க.வினோஸ்யந்தி | 02ம் இடம் | |

(சோ,கு,ச)



**சிந்தனைக்கு**

எதிரியை விட துரோகிகளே ஆபத்தானவர்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 02-11-2004

தொலைபேசி 060-2213244

தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


# எங்களது நிலம், தொழில்பறிப்பில் உங்களுக்கும் பெரும் பங்குண்டு

## வட-கிழக்கு ஆளுநருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

நீங்கள் முன்னர் சிறிலங்காப் படைத்தளபதியாக இருந்துள்ளீர்கள். எமது நிலம், கடல், வான் பறிப்பில் உங்களுக்கும் பங்குண்டு என வடக்கு-கிழக்கு ஆளுனருக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் யாழ். மாவட்ட சமாசம் ஆளுநரின் யாழ் வருகையை எதிர்த்து அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் அக்கடிதத்தில் அரசியல் சதுரங்கப் பலகையில் பேரினவாதத்தின் வெறிமிகுந்த விரல்கள் காய்களை நகர்த்து கின்றன என்பதை நாம் அறிவோம். சமாதானத்திற்கான போர் என்றுகூறி தமிழினத்தையே அழிப்பதற்கான யுத்தத்தை நடாத்தி தோல்வி கண்டது. சிறிலங்கா அரசு என்பதை முழு உலகமே அறியும் இப்போது மிக அவசரமாக அனைத்துலகத்தையும் ஏமாற்றுவதற்கான காய்நகர்த்தல்கள் இடம் பெறுகின்றன. அந்த அரசியல் சித்து விளையாட்டுகளை ஆட நீங்கள் யாழ்ப்பாணம் வரவுள்ளீர்கள். இதனை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. நாம் ஏமாளிகளல்ல. எலும்புத்துண்டுகளுக்கு அலையவும் இல்லை.

# அரியாலையில் குடும்ப விபரங்களைக் கோரி இராணுவம் கி.அலுவலர் மீது நெருக்குதல்

*( நல்லூர் )*

அரியாலைப் பகுதியில் நிலை கொண்டுள்ள 514ஆவது படையினர் அரியாலை கொழும்புத் துறைப் பகுதியில் உள்ள பொது மக்களின் குடும்ப விபரங்களைத்தரும்படி வலியுறுத்தி வருவதாக கிராம அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

18 வயது முதல் 50வயது வரைக்குமான ஆண்கள், பெண்களின் விபரங்களை தரும்படி சில கிராம அலுவலர்களிடம் வேண்டப் பட்டுள்ளது.

வீடுவிடாகச் சென்று நிவாரணம் கொடுக்க வேண்டும் இதற்காகவே மேற் கூறப்பட்ட விபரங்களைச் சேகரிப்பதாகவும் கிராம அலுவலர்கள் விபரம் எதற்கென கேட்டதற்கு தெரிவித்துள்ளனர்.

கிராமஅலுவலர்கள் சிவில் நிர்வாகம் இடம் பெறும் வேளையில் இராணுவத்திற்கு விபரங்களைக் கொடுக்க முடியாது விபரங்கள் வேண்டுமாக இருந்தால் உரியபிரதேச செயலாளருடன் தொடர்புகொண்டு விரங்களைப பெறக்கூறிய போதிலும் விபரங்களைத் தமக்கு தரவேண்டும் எனக் கேட்டு வருவதாகவும் கிராம அலுவலர்கள் கூறுகின்றார்கள்.(41)

# தேசிய ஆலோசனைக் கூட்டத்தில் ஐ.தே.கட்சி கலந்து கொள்வது ஏன்?

**விளக்கம் அளிக்கின்றார் பொதுச்செயலாளர்**

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான சமாதனப் போச்சுவார்த்தைகள் முதலில் ஆரப்பிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதிலேயே ஐக்கிய தேசியக்கட்சி சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசணைச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வில்லையென கட்சியின் பிரதிப்பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், சமாதானப்பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறான கூட்டங்களில் கலந்துகொள்ள தமது கட்சி தயாரக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பல்வேறு கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களின் கருத்துக்களை ஆராய்வது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி எந்தவித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை யெனவும் அவர் கூறியுள்ளார்.

# வடக்கு-கிழக்கு ஆளுனரின் யாழ். விஜயம் இரத்து

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுனரின் யாழ் குடா நாட்டிற்கான விஜயம் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக யாழ் செயலகதகவல்கள் தெரிவிக்கின்றன இவர் நாளை யா[illegible] வருவதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது தமிழ் பிரதேசங்களில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு புன[illegible]மைப்பு வேலைகளை மேற்கொள்ளுதல் என்ற விடயத்தில் வடக்[illegible]கிழக்கு மாகணசபை இழுத்தடிப்புக்களை மேற் கொண்டு வருவதா[illegible] வடக்கு கிழக்கு மாகாண சபையின் நடைமுறைகளையும் அதன் உறுதி மொழிகளையும் ஏற்க முடியாது எனச்சுட்டிக்காட்டி யாழ். குடாநாட்டு பொது அமைப்புகள் மாணவர் அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகள் என்பன அவரின் யாழ். விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தன

இதனையடுத்து ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக அவரது யாழ். விஜயம் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (33)

# சங்கரியின் சுயரூபம்!

ஆனந்த சங்கரியின் பார்வையில் இடைக்கால நிர்வாக சபை கோருவது சனநாயக விரோதம் செயல் என்ற நிலை ஆகிவிட்டதினால் தமிழீழம் அதாவது தனியாரசு கோருவதென்பது எத்தகைய செயலாக இருக்க முடியும்? அது ஒரு தேச விரோதச் செயலா? அன்றி இன விரோதச் செயலா?

ஆனந்த சங்கரியின் பார்வையில் இது தேச விரோதச் செயலாகவும் இருக்கலாம். இன விரோதச் செயலாகவும் இருக்கலாம் ஏனெனில் தமிழீழம் என்பது இலங்கைத் தீவில் சிங்களவர்களின் மேளாண்மையிலிருந்து விடுபடுவதினால் இது தேச விரோதச் செயலாகலாம் அதே சமயம் தமிழ் மக்களின் சுதந்திரமான வாழ்விற்கு இது வழி சமைப்பதால் இது அடிவருடிகளின் பார்வியில் இன விரோதச் செயலாகலாம்.

ஏனெனில் ஆனந்த சங்கரி போன்றோர்அடிமை வாழ்விலேயே சுகம் காணப்பவர்கள் செமானர்களுக்காக அவர்கள் எதையும் பேசுவதிலும், செய்வதிலும் சுகம் காணப்பவர்கள். இவர்களுக்கு சுதந்திரத்தை கோருவதும், பெறுவதும் என்பது தேவையற்றதும் வேண்டத்தகாததுமாகும் இதனால் இன விரோதச் செயல்கள் ஆகின்றன.

ஆனால் எமக்குரிய ஆச்சரியம் கடந்த காலத்தில் இவர்களிடம் தமிழ் மக்கள் தமது தகைமையை எவ்வாறு ஒப்படைத்தார்கள் என்பதே. அதாவது அடிவருடிகளாகவே இருக்க விரும்புபவர்களிடம் எவ்வாறு தமிழ் மக்களின் தலைமை ஒன்று சேர்ந்தது என்பதாகும் இன்று இவர்களின் பேச்சு சிலருக்கு தமிழருக்கு எதிரான நடவடிக்கைக்கு வாய்ப்பளிக்கின்றதெனில் கடந்த காலத்தில் தமது தலைமை இவர்களிடம் தமிழ் மக்கள் கையளித்ததே காரணமாகும்.

இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் என்ற தபால் தலைப்பே தமிழ் இனத்திற்கு இன்று கேடு விளைவிக்கும் வகையில் ஆனந்த சங்கரியினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத்தபால் தலைப்புக்ழுள் மறைந்து நின்று கொண்டே ஆனந்த சங்கரியினால் தமிழ் இனத்திற்கு எதிராகப் பேச முடிகின்றது.

இடைக்கால நிர்வாக சபை என்பது.சனநாயக விரோதச் செயல் என ஆனந்த சங்கரி எதைக் கூறுகின்றார். பெரும்பான்மை சிங்களவரின் விருப்பத்திற்கு மாறானதாக இக் கோரிக்கை உள்ளது என்பதினாலா? அன்றி வடக்கு- கிழக்கு மக்களின் விருப்பத்திற்கு மாறானது என்ற அர்த்தத்தினாலா?

சிங்கள ஆட்சியாளர்கள் இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையை விரும்பினாலும், விரும்பாது விட்டாலும் இடைக்கால நிர்வாக சபை என்பது தமிழ் மக்களின் தற்போதைய தேவை கருதி முன் வைக்கப்பட்டதொன்றாகும். இது பௌத்த-சிங்கள பேரினவாதிகளின் பார்வையில் விருப்பாது விட்டாலும் தமிழ் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றதொன்றாகும். இடைக்கால தன்னாட்சி அதிகார சபை கோரிக்கைக்கு தமிழ் மக்கள் தமது ஏகோபித்த ஆதரைவைக் கடந்த பொதுத் தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளனர். இது எவ்வாறு சனநாயக விரோதச் செயலாக ஆனந்த சங்கரிக்குட்படது

ஆனால் எமக்குள்ள கேள்வி ஒன்று தமிழீழக் கோரிக்கையை முன் வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் போட்டியிட்ட போது ஆனந்த சங்கரி அக்கோரிக்கைகளை ஆதரித்தாரா என்பதே ஆகும். ஏனெனில் ஆனந்த சங்கரியின் இன்றைய நிலைப்பாட்டை பார்த்தால் அவர் ஆதரித்திருக்க வாய்ப்பிருந்திருக்க முடியாது. ஆகையினால் அன்று முதல் அவர் இனத் துரோகியாகவே செயற்பட்டு இருத்தல் வேண்டும்.

ஆனால் தற்பொழுது ஆனந்த சங்கரி தெரிந்தோ தெரியாமலோ தனது சுயரூபத்தை வெளிப்படுத்தி வருகின்றார். பதவி பறி போய்விட்ட ஆத்திரத்தில் இத்தகைய செயலில் அவர் இறங்கியுள்ளார். ஒருவர் எத்தனை காலத்திற்குத் தான் தனது சுயரூபத்தை மூடி மறைந்து விட முடியும்.

ஆனால் தமிழ் மக்கள் இத்தகைய துரோகிகளையும் தமது தலைவர்களாக கொண்டிருந்தமை துர்ப்பாக்கியமானது. ஆனால் இத் துரோகிகளினால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்து விடவோ அன்றித் தோற்கடித்து விடவோ முடியாது. அவ்வாறு முடியுமானால் நீண்டு வரும் துரோகிகளின் பட்டியலில் சிலராவது சாதித்திருக்க முடியும்.

ஆனால் ஒன்று தமிழ் மக்கள் தமது உரிமைக்காகப் போராடும் போது இத் துரோகிகளையும் விலக்கிச் செல்ல வேண்டியதாக இருக்கும். அத்தோடு இத்துரோகிகள் குறித்து தமிழ் மக்களுக்கு புரியவைக்க வேண்டிய தேவையும் உண்டு. ஆனால் ஒன்று இவர்கள் எவ்வேளையிலாவது இனத்திற்குப் புரிந்த துரோகத்திற்காக தமிழ் மக்களினால் தண்டிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

## —உந்துருளியில் வந்தோரை அதிரடிப்படை வழிமறித்தபோது—

# ஆயுதங்களை எறிந்துவிட்டு காட்டுக்குள் தப்பியோட்டம்

(மட்டக்களப்பு)

அம்பாறையில் சகாமம் பகுதியில் உந்துருளியில் ஆயுதங்களுடன் வந்த இருவரை சிறிலங்கா விஷேட அதிரடிப் படையினர் வழிமறித்தபோது அவர்கள் உந்ருளியையும் ஆயுதங்களையும் கைவிட்டு காட்டுக்குள் தப்பி ஓடிவிட்டதாக அக்கரைப்பற்றுப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கைப்பற்றப் பட்டவை நவீனரக ஆயுதங்கள் எனவும் இவற்றை அதிரடிப் படையினர் அக்கரைப்பற்று பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் பொறுப்பதிகாரி பொலிஸ் நிலையப் ரீ.எம்.ஐ.எம். புகாரி தெரிவித்துள்ளார்.

கிரணைற் பிஸ்ரல் 44 எப் .எம் ரகத்தைச் சேர்ந்த நவீன ரக ஆயுதமும் ஐ.கொம் எப்.எம். அலைகளில் தொழிற்படும் தொலைத் தொடர்பு கருவிகள் இதில் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாதாள உலககுழு நபர் நீர்கொழும்பில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

பன்னிரண்டு வருட காலம் சிறைத்தண்டனை அனுபவித்து கடந்த ஆறுமாதங்களுக்கு முன்னர் விடுதலையான பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த நபர் ஒருவர் நீர்கொழும்பில் உள்ள விடுதி ஒன்றின் முன்னால் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். பலியானவர் நீர்கொழும்பில் உள்ள அந்த விடுதியில் மதுபானம் அருந்திக்கொண்டிருந்த போது அங்குமோதல் ஒன்று இடம்பெற்றதாகவும், பின்னர் மோதல் முடிந்து அவர்கள் விடுதிக்குமுன்பாக வந்தபோதே துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பொலிசார் தெரிவித்துள்ளனர்.




# சிறப்புற நடைபெற்ற காந்தரூபன் அறிவுச்சோலை

## 11ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சிகள்

(அலுவலக செய்தியாளர்)

காந்தரூபன் அறிவுச் சோலையின் பதினோராம் ஆண்டு நினைவு நிகழ்வு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள காந்தரூபன் அறிவுச்சோலை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

நேற்றுமாலை 4.30 மணிக்கு அறிவுச்சோலை மாணவன் த.றஞ்சித் குமார் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கெயர்நிறுவனத் திட்ட இணைப் பாளர் கே.கணேசலிங்கம் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக்கொடியை நிதர்சனம் நிறுவனப் பொறுப்பாளர் சேரலாதன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து சிறப்பாக வடிவ மைக்கப்பட்டிருந்த இடத்தில் வைக் கப்பட்டிருந்த கடற்கரும்புலி மேஜர் காந்தரூபன் உள்ளிட்ட மாவீரர் களின் உருவப்படங்களுக்கு சுடர்ரேற்றி வைக்க, அதனைத் தொடர்ந்து காந்தரூபன் அறிவுச் சோலைக் கொடியை அறிவுச் சோலை மாணவன் தேவதாஸ் ஏற்றிவைத்தார். இதில் நினைவு ரையை அறிவுச்சோலை இல்ல பிரதம நிர்வாகி புவியரசன் நிகழ்த் தினார்.

இதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமானது. வர வேற்புரையை போராளி ஸ்ரீ.நாவண் ணன் வழங்கினார். அடுத்து மாவீரர் அஞ்சலி நடனம் இடம் பெற்றது. அஞ்சலி நடனத்தைத் தொடர்ந்து சிறப்புரையை வணபிதா பிரான்ஸ்சிஸ் ஜோசப் ஆண்டகை நிகழ்த்தினார்.

இதனையடுத்து காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்களி டையே நடத்தப்பட்ட விளையாட் டுப் போட்டிகள் மற்றும் பரீட் சைகளில் சித்திபெற்ற மாணவர்க ளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பரிசளிப்பைத் தொடர்ந்து சங்க நாதம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றது. நன்றியு ரையை அரச,அரசசார்பற்ற நிறு வனங்களுக்கும் காந்தரூபன் அறிவுச்சோலைக்கு மான இணைப் பாளர் கதிரவேல் ஐயா நிகழ்த்தி னார்.

இந்நிகழ்வில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி கள் போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். (லோ,தீ)

## சமாதானம் வேண்டி பூநகரியில் சிலுவை தாங்கிய அமைதிப் பவனி

(பூநகரி)

நீதியானதும், நிலையானது மான சமாதானம் வேண்டிநேற்று முன்தினம் பூநகரியில் சிலுவை தாங்கிய அமைதிப் பவணி இடம்பெற்றது.

முதலில் வாடியடியில் இருந்து கிறிஸ்தவதேவாலயம் நோக்கி இப் பவணி நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை பூநகரி பங்குத்தந்தை லியோ ஆம்ரோங் தலைமையில் பூநகரி இளைஞர் வட்டம் ஏற்பாடு செய்தது. இங்கு வட்டக்கச்சி தேவலாயத்தில் இருந்து அகஸ்டின் பங்குத்தந்தை தலைமையில் இளைஞர் வட்டத்தினர் சிலுவை யொன்றை கொண்டு வந்து பூநகரி வாடியடியில் பூநகரி பங்குத் தந்தை யிடம் ஒப்படைத்தனர். இச் சிலு வையை முன்னோக்கிக் கொண்டு வர அமைதிப்பவணி இடம் பெற்றது. இப்பவணி நேற்று பூநகரி யில் இருந்து வலைப் பாட்டிற்கு சென்றது. அங்கு பவணி முடிவடைந் ததும் வழிபாடு நடைபெற்றது.

## கற்பகபுரம் கிராமத்திலிந்து வெடிபொருட்கள் அகற்றல்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா கற்பகபுரம் கிரா மத்திலிருந்த வெடிபொருட்களை முரண்பாடுகளுக்கான ஜப்பானிய மையம் என்ற அமைப்பு முற்றாக அகற்றியுள்ளது.

கற்பக புரம் கிராமத்திலுள்ள 44000 சதுர மீற்றர் பரப்பளவில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடி பொருட்களைக் கடந்த எட்டு மாதங்களாக முரண்பாடுகளுக்கான ஜப்பானிய மையம் என்ற அமைப்பு அகற்றியுள்ளது.

வெடிபொருட்கள் அகற்றப்பட்ட மைக்கான உறுதிப்படுத்தல் சான்றி தழை அம்மையத்தின் தொழில் நுட்ப ஆலோசகர் மைக்கல்சான்சன என்பவர் வவுனியா அரச அதிபர் க.கனேஷ் கையளித்தார். இக் கையளிப்பு நிகழ்வு நேற்று நெளுக் குளம் தொழில் நுட்பக் கல்லூரி யில் நடைபெற்றது.

இக் கிராமத்தில் வசித்து வந்த 210 குடும்பங்கள் யுத்தம் காரண மாக இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

### கொழும்பு-புலஸ் வீதியில்-

## கழிவு நீர் வாய்க்காலில் இருந்து தமிழ் மாணவனின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட அரச தமிழ்வித்தியாலய மாணவன் ஒருவரின் சடலம் கொழும்பு புலஸ் வீதியில் உள்ள கழிவுநீர் வடிகால் ஒன்றில் இருந்து நேற்று மீட்கப் பட்டது.

நாசரஹென் பிட்டிய அலுபதா வது தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட சொக்கலிங்கம் தினேஸ் குமார் வயது 18 என்ற மாணவ னின் சடலமே இவ்வாறு மீட்கப் பட்டது. இந்த மாணவன் நேற்று முன்தினம் மாலை வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் இனந் தெரியாத சிலரின் தாக்கு தலுக்கு இலக்காகியதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகக் கறுவாத் தோட்டப் பொலிசார் கூறியுள்ளனர்.

இம் மரணம் தொடர்பான விசா ரணைகள் கொழும்பு பிரதான நீதி மான் குசலாத் சறோஜினி வீர வர்த்தன தலைமையில் நேற்று நடைபெற்றன. மரணவிசாரணைகள் இன்று நடைபெறவுள்ளன.

### பயிற்சி

பூநகரி அபிவிருத்தி புனர் வாழ்வுக்கழகத்தால் பூநகரி பிர தேசத்தில் உள்ள 22 முன்பள்ளி களை சேர்ந்த ஆசிரியர்கள்கான ஐந்து நாள் பயிற்சி எதிர்வரும் 05.11.2004 தொடக்கம் 09.11.04 வரை 4ஆம் கட்டையில் உள்ள பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத் தில் முன்பள்ளித் தலைவர் தா.கிருஷ்ணசாமி தலைமயில் பயிற்சிகள் நடபெறவுள்ளது இதில் முன்பள்ளி கற்குக உள்ள மாண வர்கள் எவ்வாறு முன்னேற்றலாம் என்பது பற்றியும் ஆராயப்படும்

### கூட்டங்கள் ஒத்திவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அரச செயலக மண்டபத்தில் வழமையாக நடைபெறும் கல்விக்குழு, மற்றும் சுகாதாரக்குழுக் கூட்டங்கள் தவிர்க்க முடியாத காரத்தினால் இன்று நடைபெற மாட்டாதென கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டங்கள்நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படு மெனவும் தெரிவித்துள்ளார் (சோ.கு)

### ஆங்கிலஆசிரியர்களுக்கு

3-11-2004 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி கல்வி வலய பாடசாலையைச் சேர்ந்த அனைத்து ஆங்கில ஆசிரியர்க ளையும் (நிரந்தரம், பகுதி நேரம்) கிளி வலயக்கல்விப் பணிமனைக்கு சமூகம் தருமாறு கிளிவலயக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தேசிய...

பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்டறியும் நோக்கிலேயே சமாதானத்திற்கும் தேசிய நல்லிணக் கத்திற்குமான தேசிய ஆலோசனைச் சபையின் அரசியல் குழு தாபிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாக அரசியல் கட்சிகள் கொண்டுள்ள மாறுபட்ட கருத்துக்களை முன்வைக்க இதன்மூலம் சந்தர்ப்பம் கிடைத் துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். தேசிய ஆலோசனைச் சபையில் அரசியல், சமய, சிவில் சமூகம் என மூன்று உபகுழுக்கள் உரு வாக்கப்பட்டுள்ளதாக சனாதிபதி கூறியுள்ளார். இதேவேளை நேற்று நடை பெற்ற அரசியல்குழுக்கூட்டத்தின் இணைத்தலைமைத்துவம் பிரதம ருக்கும், எதிர்க்கட்சித்தலைவருக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் சனாதிபதி கூறியுள்ளார்.

### மலேசியா....

வதோடு அவர்களும் வெகு விரவில் திருப்பியனுப்பப்படு வார்கள் என நம்பப்படுகின்றது. அத்தோடு மலேசியாவில் சட்ட விரோதமாகத் தங்கியுள்ள அவர்களை ஒக்டோபர் 24ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 14 ஆம் திகதி வரையான காலப் பகுதிக் குள் வெளியேறுமாறும் மலேசிய அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### கோழி....

வர்களான உடுவில் பட்டியோலை என்னும் இடத்தைச் சேர்ந்த பரமசாமி ஆனந்தபாபு (வயது 21) ஒரு பிள்ளையின் தந்தை மற்றவர் உடுவில் முருகமூர்த்தி கோயிலடி யைச் சேர்ந்த கந்தசாமி மோகன தாஸ்( வயது 27) மூன்று பிள்ளைக ளின் தந்தை.

இவ்விருவரும் கோழிக்கூட்டில் இருந்த மின்சாரம் பல்பை உடைத்துவிட்டு திருட முற்பட்ட வேளை உடைக்கப்பட்ட பல்பில் இருந்து மினசாரம் இவர்களைத் தாக்கியதனாலேயே இவ்விரு வரும் மரணம் அடைந்ததாக சுன்னாகம் பொலிசாரின் விசாரணை யின் மூலம் அறியவருகின்றது.

இதேநேரம் இவ் இறந்த இரு வரின் உடல்களையும் கடத்திச் செல்ல முற்பட்டதாகவும் களவுக்கு உடந்தையாகவும் இருந்ததா கக் கூறி சண்முகம் சுலக்ஷனா ஒரு பிள்ளையின் தாய் மாற்றும் ராஜேந்திரம் யோகராணி ஆகிய இரு வரும் சுன்னாகம் பொலி சாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட இருவரும் இறந்தவர்களின் கோழிக்கூட்டுக்கு அருகில் கிடந்த உடல்களை இழுத்து வந்து வீதியில் போட்டுவிட் டுள்ளனர். அத்துடன் ஆட்டோ ஒன்றின் மூலம் இவ் உடல்களை கடத்திச்செல்ல முற்பட்டபோது ஆட்டோசாரதி மறுத்துள்ளார். குறிப்பிட்ட இடத்தை பார்வையிட்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் யாழ். போதனாவைத்திய சாலைக்கு சடலங்களை அனுப்பி மரண விசாரணையை மேற் கொள் ளும்படி பணித்துள்ளார். (41)

### காத்தான்....

இச் சம்பவத்தை அடுத்து நேற்றுக் காலை முதல் மாலை வரை இருந்த அமைதி நிலை மாறி மீண்டும் வன்முறை வெடித் தது.

இதன்போது இருபதுபேர் காயங் களுடன் மருத்துவமனை களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மருத்துவ மனை யில் பதினைந்து போரும், காத் தான் குடிமருத்து வமனையில் நான்கு பேரும்,ஆரையம்பதி மருத் துவமனையில் ஒருவரும் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை அப்பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கிரனேட் வெடிச்சத்தங்களும் கேட்டன.

இது இவ்வாறிருக்க மகிழடித் தீவில் இருந்து நோயாளர் ஒருவரை மட்டக்களப்பிற்கு ஏற்றிச் சென்ற அம்பிலன்ஸ் வண்டி காத்தான்குடியில் வைத்து கல் லெறிக்கு இலக்காகி சேதமடைந் துள்ளது.

இதன்போது அதன் கண் ணாடிகள் நெருங்கியுள்ளன. இதனையடுத்து மட்டக்களப்பு மருத்துவமனைக்குச் சென்ற மேற்படி அம்பிலன்ஸ் வண்டி மீண்டும் மகிழடித்தீவிற்கு திரும்ப முடியாத நிலையில் மட்டக்களப்பு மருத்துவமனையிலேயே தரித்து நின்றமை குறிப்பிடத்தக்கது.

### யசூசி...

பணிப்பாளர்ஊடாக கிகுடா, வெளிநாட்டு அலுவல்கள் அமைச் சின் தென்மேற்கு ஆசிய பிராந் திய அலுவலர் கிடியேகி கற்றனாகா, இலங்கைக்கான யப்பா னிய தூதுவர் அக்கி யோசூடா, பாதுகாப்பு அலுவல் கள் உத விச்செயலர் கப்டன் தெருமாசா கினோ, மற்றும் செயலக அலுவலர் களும் கலந்து கொண்டனர்.

முன்ன தாக நேற்றுக்காலை 11.45 மணிக்கு சிறிலங்காவின் படைக் குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத தில் வந்திறங்கிய ஜப்பானிய சமாதானத் தூதுவரையும் குழுவினரையும் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் சமா தான செயலகத்தைச் சேர்ந்த சுடர்மணி ஆகியோர் வரவேற்று விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இதற்கு முன்னதாக அரசியற்து றைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அவர்கள் ஐரோப்பிய பயணத்தை முடித்துக் கொண்டு காலை 7.15 மணியள வில் வன்னி திரும்பியிருந்தார். (சோ,கு)

### தடைகளை....

முட்டுக்கட்டையைத் தீர்ப் பதற்குச் சகல முயற்சிகளையும் மேற் கொள்வதற்கான உடன்பாட்டை அடைந்துள்ளோம். நல்ல பலன் களை அடையக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. சர்வதேச சமூகம், ஜப்பானிய அரசும் வெளி யில் இருந்து உதவிகளை, அனு சரணையை வழங்கமுடியும் என்றும் தெரிவித்தார். சனாதிப தியிடம் இருந்து புலிகளுக்கு தகவல் ஏதும் கொண்டுவந்தீர்களா என்பதற்குப் பதில் கூற மறுத்து விட்டார். சனாதிபதியிடம் நீண்ட நேரம் சந்தித்து உரையாடிய தாகவும் அவருடைய நிலைப் பாட்டை விடுதலைப்புலிகளுக்கு எடுத்துச்சொல்வதாக வாக்குறு தியளித்ததுடன், இன்று அதைச் செய்துள்ளோம் என்றார். சமாதானப் பேச்சுக்கள் எப் பொழுது ஆரம்பிக்கப்படும் என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர் நான் நினைக்கின்றேன் நோர்வே அனுசரணையாளர்கள் விரைவில் இங்கு வந்து உத்தியோக பூர்வமான சமாதான முயற்சிகளில் ஈடுபடுபவர் இன்றைய சந்திப்பு பற்றி நோர்வே நாட்டினருக்கு எடுத்துக் கூறுவேன் இது பேச்சுவார்த்தையை மீள ஆரம் பிப்பதற்கு நல்ல சாத்தியப் பாடுகள் உள்ள நிலை என நான் நினைக்கின்றேன். இவ்விளை வைக் கூட சனாதிபதி அரசியற் கட்சி யினருடனும், சமயகுருக் களுடனும், பொது அமைப்புக்க ளுடனும், தேசிய ஆலோனைச்ச பையினூடாக கலந்தாலோசித்து அதன்பின் அதற்கான காலம் விரைவில் அறிவிக்கலாம்.

கேள்வி:- சமாதான முன்னெடுப் புத் திட்டத்திலும் அதன் புதிய அபிவிருத்தியிலும் திருப்தி அடைந்துள்ளீரா?

சமாதான முன்னெடுப்புக்கள் தொடரப்படுவதையிட்டு மகிழ் வடைகின்றேன். இதன் கருத்து போர்நிறுத்த உடன் படிக்கை இரு பகுதியினராலும் பேணப்படுகிறது. இருந்தும் அதில் சில குறைகள் உள்ளன. நாம் அதைத் தெளிவு படுத்தியுள்ளோம். இக்குறை பாடுகள் பூச்சிய நிலைக்கு வரும்.ஆனால் முன்னெடுப்பு நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை. தற்போதைய நிலை மையை வைத்துக்கொண்டு நாம் முடிவிற்கு வரமுடியாது. நாம் படிப்படியாக இதை நிரந்தத்தீர்வு நோக்கி நகர்த்த முயற்சியெடுக்க விருப்பமாகவுள்ளோம். பேச்சு வார்த்தையினூடாகவே நிரந்தர சமாதானத்தை அடைய முடியும்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.